New Master Institute
B. M. C. Lane, Jaffna.
90 A/L
Weekend Classes
விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பமாகிவிட்டன

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

New Master Institute
B. M. C. Lane, Jaffna.
90 A/L
Weekend Classes
[10-07-88 Sunday]
07-30 — Chemistry
9-30 — Pure Maths
10-30 — Applied Maths
9-30 — Botany
10-30 — Zoology
11-30 — Physics
(எமது வழமையான ஆசிரியர் குழு)

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆனி மீ 29 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 28 ( 13 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 120

# மக்கள் கருத்தறிய இந்திய அதிகாரிகள்

## யாழ்.வந்து கலந்துரையாடல்

– அலுவலகச் செய்தியாளர்: ஜோய் பூரணச்சந்திரன் –

யாழ்ப்பாணம், ஜூலை 13

தமிழ் மக்களின் இப்போதைய அரசியல் சூழ்நிலையில், அவர்களின் கருத்து என்ன என்பது குறித்து அறிந்து கொள்வதற்காக, இந்திய ஐ.ஏ.எஸ் சேவையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

நேற்று அவர்கள் 15 பேரைக் கொண்ட பிரமுகர்கள் குழு ஒன்றை அழைத்துக் கலந்துரையாடல் நடத்தினர்.

தமிழ் மண்ணில் நிரந்தர அமைதிக்கு வழி கோல வேண்டும். இந்தியா அதனைச் செய்ய விரும்பினால் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நிரந்தர சமாதானத்துக்கு வழிகோல வேண்டும்.

இவ்வாறு பிரமுகர்கள் குழு இந்திய அதிகாரிகளிடம் வலியுறுத்தியதாக மிக நம்பிக்கையாகத் தெரிய வந்தது.

இப்போதையசூழ்நிலையில் தமிழ் மக்களின் கருத்து என்ன என்று அறியும் பொருட்டு இந்திய அரசின் பிரதிநிதிகளாக மூன்று ஐ.ஏ. எஸ். அதிகாரிகள் இங்கு வந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் கடந்த வாரமே இங்கு வந்திருந்தார். ஏனைய இருவரும் நேற்றுப் புதுடில்லியில் இருந்து வந்தனர்.

அவர்கள் மூவரும், இந்திய அமைதிப் படையின் பிரதி நகரக் கொமாண்டர் கேணல் கே. கே. கங்குலியும் நேற்றைய கலந்துரையாடலில் பங்குபற்றினர் பிரமுகர்கள் தரப்பில் பதினைந்து பேர் தமது கருத்துக்களைத் தனித்தும் கூட்டாகவும், ஏகோபித்தும் தெரிவித்தனர்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன இந்திய அமைதிப் படையை தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளையும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 50 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 13

இரத்தினபுரி நாடாளுமன்றத் தொகுதியில் நேற்றுக்காலை 50 சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களைப் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் துப்பாக்கி

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஓம், ஓம் அவை தெற்கை போக வேண்டிய காலம்தான் இது...!

# யாழ். கோட்டை சிப்பாய்கள் தெற்கே!

## மிகச் சிலரே இங்கு மிச்சம்

- அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் -

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணக் கோட்டையில் நிலை கொண்டிருந்த ஆயிரக் கணக்கான ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் அவசரமாக தெற்கே அழைக்கப்பட்டுள்ளனர்.

தெற்கில் அதிகரித்து வரும் வன்செயல்களைத் தொடர்ந்தே சிப்பாய்கள் இவ்விதம் அங்கு அழைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த இடமாற்றம் அண்மையில் நடந்தது என்றும், இப்போது இலகுவில் எண்ணிவிடக் கூடிய அளவுக்கே சிப்பாய்கள் இங்கு கடமையில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்றும் அறியவந்துள்ளது.

யாழ் கோட்டையில் பணிபுரியும் ஸ்ரீலங்கா பொலீஸ் அதிகாரிகள், உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்புக் கருதியே இந்தச் சிலரும் இங்கு விட்டு வைக்கப்பட்டனர் எனவும் சொல்லப்படுகிறது; ஆனால் ஊர்ஜிதமில்லை.

இதே வேளை கோட்டை முகாமின், மேல் தளத்தில் ஸ்ரீலங்கா சிப்பாய்கள் இருந்த அனைத்து சென்றிகளிலும் இந்திய அமைதிப்படையினரே தற்பொழுது கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். [அ-10]

## மன்னார் வவுனியா தொலைபேசி சேவைகள் சீரற்ற நிலையில்

வவுனியா, ஜூலை. 13

மன்னார், வவுனியா ஆகிய இடங்களுக்கான தொலைபேசி சேவைகள் சீர்குலைந்துள்ளன.

தற்போது மன்னாருடன் நேரடி தொலைத் தொடர்பு லைன்கள் மிகச் சிலவே (சுமார் ஆறு) செயற்படுகின்றன.

வெளிமாவட்டங்களில் இருந்து மன்னாருடன் தொடர்புகொள்ள முடியாத நிலமையே நிலவுகின்றது.

மன்னாரிலிருந்து வெளிமாவட்டங்களுடன் தொடர்புகொள்ளக்கூடியதாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றன.

இதற்கிடையில் கடந்த சில தினங்களாக வவுனியா நேரடி தொலைபேசித் தொடர்புகளும் சீராக இயங்கவில்லை. இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு குறிப்பாக அரசாங்க அதிபருக்கும், அஞ்சல் அலுவலகத்திற்கும் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொலைத் தொடர்பு திணைக்கள வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (க-164)

## படகு மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 13

முல்லைத்தீவுக் கடலில் இந்திய ஜவான்கள் சென்ற படகு ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் தாக்கியதில் இரண்டு ஜவான்கள் உயிரிழந்தனர் என்றும் 2 ஜவான்கள் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

படகில் இருந்த இந்திய ஜவான் திருப்பிச் சுட்டதில்மூன்று போராளிகள் உயிரிழந்தனர் என்றும் கூறப்பட்டது. ]அ-எ]

## சுட்டுக் கொலை

கொக்குவில்வாசியான மயில்வாகனம்பாஸ்கரன் (வயது 25) இனந் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை தனது வீட்டில் இருந்து புறப்பட்ட இவரின் சடலம் திங்கட் கிழமை கண்டெடுக்கப்பட்டது. (க-10)

## புதிய ஐ. ஜி. பி.

கொழும்பு. ஜூலை 13

புதிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக (ஐ.ஜி.பி.) திரு. ஏணஸ்ட் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வுபெறும் திரு. சிறில் ஹேரத்தின் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள இவர் ஆகஸ்ட் முதலாம் திகதி கடமையைப் பொறுப்பேற்பார். (க)

இந்தியாவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும்

## ஒப்பந்தம்ஏற்பட்டால் நாம் வரவேற்போம்

### ரேலோ புதியதளபதி சொல்கிறார்

வவுனியா, ஜூலை 13

"இலங்கை – இந்திய அமைதி ஒப்பந்தத்தை இந்திய அமைதிப் படையினரும் சம்பந்தப்பட்டவர்களும் உரிய சரியான முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதே எமது விருப்பம"

இவ்வாறு ரெலோ இயக்கத்தின் வன்னி மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள குகன்சய் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, ஒப்பந்தம் ஒன்று ஏற்படுமானால் அதனை நாம் வரவேற்கின்றோம். ஒப்பந்தம் ஏனைய சகல போராளிகள் குழுக்களுக்கும் வடகிழக்குப் பகுதிகளின் செயற்பாடுகளில் பங்களிப்பைக் கொடுக்கும் வகையில் அமையுமானால் அதனை நாம்மேலும் மகிழ்ச்சியுடன் வரவேற்

( 8 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ் நகரில் நேற்று பல இடங்களில் சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை. 13

நேற்று யாழ் நகரின் பெரும்பாலான இடங்களில அமைதிப்படையினர் தமது சோதனை நடவடிக்கைகளை அதிகரித்திருந்தனர்.

நேற்றுக் காலை கொழும்புத்துறை உதயபுரம் பகுதி, இந்திய அமைதிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. உதயபுரம் குடியிருப்பாளர்களை புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒன்று திரட்டிய அமைதிப்படையினர் இரண்டு மணிநேரத்தின் பின் அவர்களை வீடுகளுக்குச் செல்ல அனுமதித்தனர்.

மாலை பாஷையூர் அந்தோனியார் ஆலயத்திற்கு வந்த பக்தர்களையும் அயலவர்களையும் ஆலய முன்றலில் ஒன்று கூடப் பணித்த அமைதிப் படையினர் சுமார் இரண்டு மணிநேரத்தின் பின்னர் சோதனை செய்து வீடுசெல்ல அனுமதித்தனர்.

மேலும் யாழ். நகர வீதிகளிலும் அமைதிப் படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது. (க-51-5)

## குமுழமுனை, தண்ணீரூற்று மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை. 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமுழமுனை, தண்ணீரூற்று பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இந்தப்பகுதிகளில் இந்திய இராணுவத்தினரின் நடமாட்டமும், தேடுதல் நடவடிக்கையும் அதிகரித்திருப்பதன் காரணமாகவும், அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வருவதாலுமே இப்பகுதி மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவும் இப்பகுதிகளில் அடிக்கடி பிறப்பிக்கப்படுகிறது. அதனால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத சூழ்நிலையும் தோன்றி உள்ளது. அதே போல கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் உட்பட அத்தியாவசிய அரச சேவை ஊழியர்களும் கடமைக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் வழமையைவிட சோதனை நடவடிக்கைகளும், தேடுதல்களும் அதிகரித்துள்ளன. (க-10)

## பாஸ் வைத்திருப்போர் நலனைக் கருதியே ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும்

### பிரதி நகரக் கொமாண்டர் தகவல்

இந்திய அமைதிப் படையினரால் வழங்கப்படும் வாகனங்களுக்கான பாஸ்கள் ஆங்கிலத்தின், ஹிந்தியிலும் எழுதப்பட்டிருப்பது. பாஸ் வைத்திருப்பவர்களின் நன்மையைக் கருதியே.

இவ்வாறு யாழ். நகர பிரதிக் கொமாண்டர் கேணல் கே. கே. கங்குலி விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பத்திரிகைக் குறிப்பின் விவரம் வருமாறு:–

சில வாகனங்களுக்கும் தனி ஆட்களுக்கும் வழங்கப்பட்டுள்ள 'பாஸ்'கள் ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் எழுதப்பட்டுள்ளன.

பலரும்கேட்டுக்கொண்டதன் பேரிலேயே அவ்வாறு இரு மொழிகளிலும் பாஸ்கள் எழுதப் பட்டுள்ளன.

அமைதிப் படை ஜவான்கள் சோதனை செய்யும் போது இலகுவில் விளங்கிக் கொள்ளவும், அதனால்பாஸ்வைத்திருப்போருக்கு அசெளகரியம் ஏற்படாமல் தவிர்க்கவுமே பாஸ்கள் ஹிந்தியிலும் எழுதப்பட்டுள்ளன.

பொதுமக்கள்தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த அறிவித்தலை விடுக்கிறேன்– என்று கேணல் கங்குலி தமதுகுறிப்பில் தெரிவித்துள்ளார். (அ–ச)

## சுபநேரம்

13 - 7 - 1988
ஆனி– 29
புதன்கிழமை
சுபநேரம்:
04–30 பகல் 06–00 வரை
ராகுகாலம்:
12-00 முதல் 01-30 வரை
அமாவாசை விரதம்
கதிர்காமம் கொடி

## துப்பாக்கிகள் அபேஸ்

கொழும்பு. ஜூலை 13

மொனராகல பொலீஸ் பகுதியில்பிம்புர என்னும் இடத்தில் குடியிருப்பாளர்களிடம் இருந்து பத்துத் துப்பாக்கிகளை இனந் தெரியாதோர் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று அறிவிக்கப் பட்டது. (க–எ)

தற்போதைய நிலை நீடிக்குமானால்

# நீண்டகால யுத்தத்துக்குத் தயாராவதை விட வேறு வழி இல்லை

## விடுதலைப் புலிகள் அறிக்கை

வவுனியா, ஜூலை13

தொடர்ந்தும் சமாதானம் என்ற பெயரில் விடுதலைப் புலிகளையும், அதன் தலைவர்களையும், தமிழ் மக்களையும் அழிக்கும் பணி தொடருமானால் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை நிறுத்தி நிரந்தரமாக ஒரு நீண்டகாலயுத்தத்துக்குத் தமிழ்மக்கள் தயாராவதைவிட வேறு வழி இல்லை.

விடுதலைப் புலிகளின் தலைமையக அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மண்ணில் நடத்தப்பட்டு வருகின்ற போரில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளார்கள். கோடிக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. இப்போது தமிழ் மண்ணின் இயற்கைவளமான காடுகளும் அழிக்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்குமாகாணங்களைத் தற்காலிகமாக ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்து தேர்தலை நடத்திவிட்டால், தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடும் என இந்தியா பிரசாரம் செய்துவருகின்றது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளினதும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களினதும் இரத்தம் சிந்தி வளர்க்கப்பட்ட போராட்டம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டு நடத்தப்படும் தேர்தலுக்காக அல்ல.

வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் தாயகம். அது பிரிக்கமுடியாதது.

### ஒப்பரேஷன் லிபரேஷன்

கடந்த ஆண்டு வடமராட்சியில் நடைபெற்ற ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கையின்பின் தமிழீழப் போராட்டம் அழிக்கப்பட்டுவிட்டதாக இலங்கை அரசு

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக மாணவர் பிரச்சினைக்குத் தீர்வு

கொழும்பு, ஜூலை 13

தென் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீத் மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்தே தீர்வு சாத்தியமானது.

இதன் பிரகாரம் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் தொகுதி தொகுதியாக விடுவிக்கப்படுவர்.

முதலில் இன்று(புதன் கிழமை) 23 மாணவர்கள் விடுவிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

**இறைச்சி கோழி விற்பனை**

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் புரோயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். மயூரா பாம் விற்பனை நிலையம் முன்பாக சாவகச்சேரி, மகேஸ்வரி ஹோட்டல் முன்பாக கரடிப்போக்கு பாலத்தடி. கிளிநொச்சி. (4885)

**வீடுகாணி விற்பனைக்கு**

வேலணைகிழக்கு முத்துமாரியம்மன் கோவில் ரோட்டில் 10 பரப்புக் காணியும் எட்டு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோமநாதன் 369/2 நாவலர் ரோட் யாழ்ப்பாணம் அல்லது M. நவரெத்தினம் 14A, விதானைவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4996)

5½ அடி உயரம் 2½ அடி அகலமான நல்ல பாவிப்பில் உள்ள இரட்டைக்கதவு வெளிநாட்டு குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு. யவ்னு எலக்ரோ பிளேற்றேர்ஸ், நம், 7, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். வண்ணை பண்ணை சிவன் கோவிலுக்குக் கிட்டிய தூரம். (5024)

**தேவை**

Steward - உணவுப்பரிமாறுபவர் அனுபவம் உள்ளவர் அல்லது பழகுபவர் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது காலை 9-மணிக்கு நேரில் வரவும். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் (Pvt) Ltd, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4902]

கொப்பி கட்டுவதற்கும், பழகுவதற்கும் பெண்கள் தேவை. 14-7-88 காலை 10-00—12-00 மணிவரை நேரில் வரவும். ரகுவுக் இன்டஸ்றீஸ் C/o, Dr. வன்னியசிங்கம், No. 6, கோவில் வீதி, யாழ்ப்பணம். (5049)

**மணிக்கூடு திருத்துனர் தேவை**

கைக்கடிகாரம், எலக்ரோனிக்கைகடிகாரம்திருத்துவதில் தேர்ச்சிபெற்றோர் உடன் தேவை. திறமைக்கு ஏற்றவகையில் வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும்: ''சிவா வாச் வேக்ஸ்'' 185, நவீன சந்தை யாழ்ப்பாணம். (4906)

**பாவித்த தட்டச்சு தேவை**

பாவித்த, திருத்தக்கூடிய 12'' 15'' 18'' கறியேஜ் ST. உள்ள புதிய விசைப்பலகையிலான ஒலிம்பியா/றெமிங்டன் அட்லர் வகைகளைச் சேர்ந்த தமிழ்/ஆங்கில தட்டச்சுத் தேவை. தொடர்பு: வீ. அமராவதி, மே/பா வீ. மெய்யப்பன் 23, உக்குளான் குளம் ரோட். பண்டாரிக்குளம், வவுனியா. [சி-5771]

**வகுப்புகள்**

Radio T.V Air-Conditioning, Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டமெக்கானிசம், வைண்டிங் Typing Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும் Vispa Engineering Aid Hall 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமையில் யாழ்ப்பாணம். (5044)

**A/L 90 தூய. பிரயோக கணித வகுப்புக்கள்**

A/L 90 தூய, பிரயோக கணித பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம். ஆசிரியர் த. காங்கேசபிள்ளை 16/9, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். A/L 90 தூய, பிரயோக கணிதம் 14-7-88 வியாழன் மாலை 4 மணிக்கு ஆரம்பம். விபரங்கள் நேரில். முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம். [4901]

**உயர்தர மாணவர் மீட்டல் பௌதிகம்**

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது சகல புத்தகசாலைகளிலும். மீட்டல் செய்வதற்கு ஒரு சிறந்த கைநூல்– A/L இறுதிச் சோதனைக்குத்தோற்றும் மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். ஒளியியலும், ஒலியியலும், வெப்பவியல், மின்னியல், சடப்பொருளின் இயல்புகள் ஆகியவற்றை எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (4988)

**A/L பரீட்சைக்கு பிரயாண சேவை**

23-7-88 ல் நடைபெறவிருக்கும் A/L பரீட்சைக்கு, மீசாலையிலிருந்து-யாழ்ப்பாணம் வரை செல்ல இருக்கும் பரீட்சார்த்திகளுக்குபிரயாண சேவைவழங்க ''யுனிட்டிரவல்ஸ்'' ஒழுங்கு செய்துள்ளனர். செல்ல விரும்புவோர் 18-07-88 முன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: யுனிட்டி பாடசாலை சேவை சாவகச்சேரி – எஸ். பத்மநாதன். (4905)

**TYPE WRITER**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

**தவறிவிட்டது**

விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆகியஎனது அடையாள அட்டையும் (166969) லைசென்ஸ்சும் சாளிபாஸ்சும் சாவசச்சேரிக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானமும் வழங்கப்படும். (5032)

**தவறிவிட்டது**

வேலணை மேற்கு கதிர்காமு நாகரத்தினம் ஆகிய எனது அடையாள அட்டை யாழ் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து O.P.D ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம் அல்லதுகுறிகாட்டுவான் மினிபஸ்சில் ஒப்படைக்கவும். (5047)

எனது Rotary கைக்கடிகாரம் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து 257, அரசடி வீதி, சுந்தர்மடம் என்னும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5041)

கடந்த நெருக்கடி காலத்தில்

## வெள்ளைக் கொடியுடன் சென்று சேவையாற்றியவர்

### உதவிஉணவு அதிகாரிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம் ஜூலை 13

யாழ் குடாநாட்டில் நெருக்கடியான காலகட்டத்தில் வெள்ளைக் கொடியைப் பிடித்துக் கொண்டு சென்று மக்களுக்குச் சேவை ஆற்றியவர் திரு. பற்குணம்.

இடம் மாற்றம்பெற்று மன்னார் சென்ற உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிதிரு. பற்குணத்துக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் சங்கத்தலைவர் திரு. பெ. கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசும் போதுகூறியதாவது

இலங்கை இராணுவ நடவடிக்கையின்போதும் இந்திய அமைதிப்படை நடவடிக்கையின்போதும் பயங்கரமான சூழ்நிலையில், உயிரையும் பொருட்படுத்தாது துறைமுகத்துக்கும் களஞ்சியத்திற்கும் பல முறைசென்று உணவுவிநியோக நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மக்கள் பாதுகாப்பைச் தேடி ஓடிய நேரத்தில் திரு. பற்குணம் கையில் வெள்ளைக் கொடியுடன் சென்று தன் கடமையை புரிந்தார்.

இராணுவத் தடுப்பு முகாம் களைக் கடந்து களஞ்சியத்திற்கு போய் வந்தார்.

அவருடைய துணிச்சலான நடவடிக்கையின் காரணமாகவே மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களை யுத்தகாலத்திலும் பெறக் கூடியதாக இருந்தது. இப்படி அவர் கூறினார்.

தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. சிவமகராசா பேசும் போது ''பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெருக்கடியான காலகட்டத்திலும் சீராக உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்கு காரணகர்த்தாவாகவும் உறுதுணையாகவும் இருந்தவர் திரு. பற்குணம் என்றார்.

கவிஞர் சோ. பத்மநாதன் பேசும் போது திரு' பற்குணம் மதிநுட்பத்துடனும் விவேகத்துடனும் துணிச்சலுடனும் செயல்படும் கடமை வீரர் என்றார்'

கொத்தணி அதிபர் திரு. ஆ. க. இராசரத்தினம் இயக்குநர் சபை உறுப்பினர் சு. பசுபதி பொதுமுகாமையாளர் திரு. சோமாஸ்கந்தன் ஆகியோரும் திரு. பற்குணத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர்

## உடையார்கட்டு மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

புதுக்குடியிருப்பு ஜூலை 13

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக உடையார்கட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து மீளக் குடியேறும் மக்களுக்கு ரூபா ஈராயிரமும் தொழில் ஆரம்பிப்பதற்கு ரூபா ரூபா ஈராயிரமும் நிவாரணமாக வழங்குவதற்கான விண்ணப்பப்படிவம் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய கிராம மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

சமகாலத்தில் இதே நடவடிக்கையினால் தாமும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தமக்கும் விண்ணப்பப்படிவம் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரியே உடையார்கட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

''எமக்கு நிவாரணம் வழங்கப்படாவிடில் மறியல் போராட்டம் ஒன்றை ஆரம்பிப்போம்.'' என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

உதவி அரசாங் அதிபரின் உத்தர வாதத்தை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (இ – 126)

### அலுவலகம் இடமாற்றம்

சங்கானை ஜூலை 13

அரசாங்க கால்நடை வைத்தியர் அலுவலசம் 15 ஆம்திகதியில் இருந்து மானிப்பாய் கீரிமலை பிரதான வீதி கட்டுடை 6 ஆம் கட்டைக்கு முன்பாக உள்ள தனியார் வீடொன்றுக்கு இடம் மாற்றப்படவுள்ளது.

இதுவரை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க பணிமனைக் கட்டடத்தில் இது இயங்கி வந்தது.

### தென்மராட்சி பிரசைகள் குழு கூட்டம்

கொடிகாமம், ஜூலை 13

தென்மராட்சிப் பிரசைகள் குழுவின் விசேட பொதுக்கூட்டம் எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5–30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

''யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை சமாதானம்' என்பனவற்றை வலியுறுத்தி தென்மராட்சி பச்சிலைப்பள்ளி பகுதிகளில் மௌன ஊர்வலம் நடத்துவது பற்றி கூட்டத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (இ–75)

உ
சிவமயம்

**முதலாவது பிறந்த நாள் வாழ்த்து**



செல்வன் நி. கபாஸ்கர்
(13 – 07 – 1988)

வல்வெட்டித்துறை ஊறணியில் உள்ள ஏ. எஸ். நித்தியானந்தலிங்கம்–பத்மராணி தம்பதிகளின் தவப்புதல்வன் நி. கபாஸ்கர் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

நூறுண்டிற்கு அவன் முதலாண்டு வாழ்வொன்றிற்கு வெற்றி ஒன்று தான் நிச்சயம்.

இவரை குடும்பத்தாரும், உற்றார், உறவினர்களும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

(5244) ஊறணி, வல்வை.

## தீவிரவாதிகளுக்கு ஆதரவாகப் பேசுவோர் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 13

தீவிரவாதிகளுக்கு ஆதரவாக மேடைகளில் பேசுவோர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி ஆளும்கட்சியின் நாடாளுமன்றக் குழு விரைவில் ஆராய்ந்து முடிவு செய்யும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன வெலிமடைத் தொகுதியில் இடம் பெற்ற பல பிரசாரக் கூட்டங்களில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் 'தேசிய முன்னணி ஒன்றை மக்கள் அமைக்க வேண்டும். அதன்மூலம் தீவிரவாதிகளுக்காக பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உதவ வேண்டும்—'' என்று சொன்னார். (இ–எ)

## ஜூலை 29ஐ கறுப்புத் தினமாக அனுஷ்டிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 13

இலங்கை– இந்திய சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட ஓராண்டு நிறைவுதினமாக ஜூலை 29 ஆம்திகதியை கறுப்புத் தினமாக அனுஷ்டிக்கும்படி யாழ் மாவட்ட சமூக அபிவிருத்திச் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சபையின் வருடாந்தக் கூட்டத்திலே இது தொடர்பான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

★ எதிர்வரும் 29ஆம் திகதி வடமராட்சிப் பகுதியில் மாபெரும் உண்ணாவிரதப்போராட்டத்தை நடத்துதல்.

★ தமிழ் மக்களின் பாதுகாப்பையும், சுபீட்சத்தையும் வேண்டி ஆலயங்கள் தோறும் கூட்டுப்பிரார்த்தனைகளை நடத்துதல்.

★ வீடுகள், கடைகள், வர்த்தகநிறுவனங்கள் தோறும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு தமிழ் பேசும் மக்கள்தமது நிலைப்பாட்டை இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தல்.

மக்கள் சக்தியின் பேராதரவை இந்திய அரசுக்கு வெளிப்படுத்தி அதன் மூலம் உடனடி யுத்த நிறுத்தம், விடுதலைப்புலிகளுடனான நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை, பூஸாவில் கைதிகளாகக் கிடந்து அல்லலுறும் தமிழ் இளைஞர்களுக்கு விடுதலை, ஆகியவற்றை வலியுறுத்தி தமிழ் மக்களை சாத்வீக நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (இ–ர)

**HOME FINANCE DEPOSITORS UNION (SRI LANKA)**

ஹோம் பினன்ஸ் வைப்பாளர் கூட்டம் 15-07-1988 வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். சம்பனி மூடுவதை எதிர்ப்பவர்கள் சமுகம் தரவும். கொழும்பு வழக்கிற்குச் சிறந்த வழக்கறிஞர் நியமிக்கப் போதிய பண உதவி செய்யவும்.

புதிய சங்கம், புதிய சட்டம்,
புதிய நம்பிக்கை.

சதா. ஸ்ரீநிவாசன் (Advocate)
சட்டத்தரணி.

58/1, செட்டித் தெரு,
நல்லூர். (5051)

**NIRU TUITION CENTRE**

**KONDAVIL**

**A/L 90 கலை வர்த்தக விஞ்ஞானம்**

விஞ்ஞான பிரிவு யூலை - 15 ல் - 3.00 P.M
கலை, வர்த்தகம் யூலை - 16 ல் - 3.00 P.M

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்)

**88 0/L DEC. பிரிவு 1**
**DAY CLASS**

(பகல் முழுநேர வகுப்புக்கள்)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
பாடசாலை போன்ற வசதிகளுடன்
காலை 8–00 முதல் மாலை 1–30 வரை
சகல பாடங்களும் கற்பிக்கப்படும்

ஆரம்பம்: 18-7-88
(காலை- 8-00)

(குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப்படுவர்)

(C 5767)

**Munist Enterprises**

**வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள்**

உடனடியாக
★ குவைட் ★ சவூதி
வேலைவாய்ப்புகளிற்கு
**MUNIST ENTERPRISES**

சிங்கப்பூரிற்கு ஓரளவு ஆங்கில அறிவுள்ள
★ வீட்டுப் பணிப்பெண்கள் தேவை ★

உங்களுடைய பயணத்தை உறுதிப்படுத்த நாடவேண்டிய முகவரி:-

156, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(வேம்படிக்கு அருகாமையில்)

எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொண்டோர் விபரம்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | S. தேவகுமாரன் | 36, கனகரத்தினம் வீதி அரியாலை | J 0247428 |
| 2. | R. பத்மசிலன் | மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி | J 0050303 |
| 3. | S. கணேசமூர்த்தி | சாவகச்சேரி | G 0395014 |
| 4. | T. தவராஜா | திருநெல்வேலி | H 0071826 |
| 5. | N. குகனேஸ்வரன் | அரியாலை, யாழ்ப்பாணம் | G 0322531 |
| 6. | R. ரமேஸ் | 999, துண்டி வீதி, கொழும்புத்துறை | J 0087617 |
| 7. | P. சதீஸ்குமார் | 999, துண்டி வீதி, கொழும்புத்துறை | J 00230070 |
| 8. | R. பத்மராஜா | அரியாலை, யாழ்ப்பாணம் | H 0183959 |
| 9. | N. ரவீந்திரன் | கிளிநொச்சி | H 0488850 |
| 10. | K. சுப்பிரமணியம் | அரியாலை, யாழ்ப்பாணம் | G 0320715 |
| 11. | M. குணராஜா | மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி | J 0276452 |
| 12. | N. கிருஷ்ணன் | மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி | J 0034977 |
| 13. | R. ஜெயகுமார் | அரியாலை, யாழ்ப்பாணம் | J 0014932 |
| 14. | E. ஜேக்கப் | யாழ்ப்பாணம் | H 0312862 |
| 15. | N. கிருஷ்ணனந்தம் | அல்வாய் தெற்கு, அல்வாய் | H 0325444 |
| 16. | A. சத்தியானந்தன் | வீரபத்திரர் கோவிலடி, அல்வாய் | J 0147338 |

[C-5769]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திரைகடலோடியும் புகலிடம் தேடு': ஈழத் தமிழர்களின் புது மொழி இது!

## கனடாவிற்குள் நுழையும் முயற்சி தோல்வியுற்ற விதம்!

சர்வதேச செய்திகளில் அடிக்கடி இடம் பெறும் இனத்தவர்கள், சமீபகாலம் வரை யூதர்களும், பலஸ்தீனியர்களுமே. கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் இனப்பூசல்கள் காரணமாக இலங்கைத் தமிழர்களும் இந்தப்பட்டியலில் சேர்ந்து விட்டனர். இப்போது 'தமிழன்' என்று இனவாரியாக அடையாளம் காட்டும்போது உலகின் எந்த மூலைமுடுகிலும் அவன் தெரிந்து கொள்ளப்படுகிறான்! சில சமயம் அதுவே பிரச்சினையுமாகி விடுகிறது!

உதாரணமாக ஒரு சம்பவம்—

மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு மேற்கு ஜெர்மனியில், ஹம்பர்க் நகரத்திலிருந்து இருபது மைல் தூரத்தில் ஒதுக்குப்புறமான ஹிற்பெல்ட் என்னும் இடத்தில் ஒரு பாழடைந்த விடுதியில் 269 பேர் வந்து சேர்ந்து காத்திருக்கின்றனர். இவர்களில் சுமார் 260 பேர் தமிழர்கள், மீதிப் பேரில் பங்களாதேஷ் வாசிகளும் சேர்த்தி. தமிழர்களில் பெண்கள் சிறுவர், சிறுமியர், கைக்குழந்தைகளும்கூட இருந்தனர்.

ஜெர்மன் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் (சிலர் சுமார் 500மைல் தூரத்திலிருந்தும்) கொஞ்சம் கொஞ்சமாக சந்தடியின்றி வந்து குழுமிய இவர்களை யாரும் சந்தேகிக்கவில்லை. அனைவரும் அந்தப் பாழ் விடுதியின் மாடியிலிருந்த பதினேழு அறைகளில் 'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து' அடைந்து கிடந்தனர். அவசியத் தேவைகளுக்கு இரண்டொருவர் வெளியில் நடமாடினர். விடுதியின் கீழ்த்தளத்தில் குடியிருந்த விடுதி உரிமையாளர் வயோதிகப் பெண்.

ஆனால் அதேசமயம், அந்தக்கூட்டத்தின் கனவுகளைக் கலைப்பதற்கென்றே அந்த நிகழ்ச்சி நடந்தது.

நகரிலிருந்து ஒருதமிழ் கும்பலை ஏற்றிக்கொண்டு ஒரு டிரக் வண்டி ஓடுவதைக்கண்ட இருபொலீஸ்காரர்களுக்கு ஏதோ சந்தேகம் வந்துவிட்டது. கொள்ளை கூட்டமாக இருக்குமோ? பொலீஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுத்துவிட்டு 'டிரக்'கைப் பின்தொடர்ந்தனர். டிரக் நேராக அந்தப் பாழ் விடுதியின்முன் போய் நின்றது. பின் தொடர்ந்து வந்த பொலீஸாரும் விடுதி அருகில் வந்த போது, விடுதி ஜன்னல்களிலிருந்து எத்தனையோ தலைகள் அங்கொன்று இங்கொன்றாக எட்டிப்பார்த்துவிட்டு மறைந்தன.

உஷாராகி விட்டது பொலீஸ்.

சற்று நேரத்தில்சுமார் 50 பேரைக் கொண்ட பொலீஸ் படையொன்று விடுதியைச் சுற்றி வளைத்துக்கொண்டது. கொள்ளைக் கூட்டம்தான் என்று முடிவுகட்டி, அவர்களைப் பிடிப்பதற்குத் துப்பாக்கிகளுடன் நிதானமாக மாடிப்படி ஏறினர்.

அங்கே..

விடுதியில் அடைந்து கிடந்தது கொள்ளைக்

> கனடாவுக்குச்செல்ல மே.ஜேர்மனில்உள்ள ஈழத் தமிழர் எடுத்த இரகசிய முயற்சி குறித்து 'ஜூனியர் விகடன்' வார இதழ் கடந்த 06-07-1988 பிரசுரித்த கட்டுரை இது. கரிகாலன் என்பவர் இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

கூட்டம் அல்ல! அன்றிரவு 'லூபா' என்ற கப்பலில் கனடா நாட்டுக்குப் பயணமாகவிருந்த... தமிழ் அகதிகள்.

கள்ளத்தனமாக நாட்டை விட்டே ஓடுவது சட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத சங்கதி தான். என்ன செய்வது 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று ஒரு பழமொழி உண்டு. ஈழத்து இனப்படுகொலைகளுக்குப் பின்னர் 'திரைகடலோடியும் புகலிடம் தேடு' என்பது தமிழர்களின் புதுமொழி!

பொலீஸ் கையில் தமிழர்கள்சிக்கியதால் அவர்கள் பயணம் நின்று போனது. ஆனாலும், தமிழ் அகதிகளை ஜெர்மனியில் அணைத்து ஆதரிக்கும் வால்டிமர் ஸ்டீன் என்பவர் அந்தக் கப்பல் பயணம் நிறுத்தப்பட்டது குறித்துகடவுளுக்கு நன்றி தான் செலுத்தினார் அதிர்ஷ்டவசமாகப் பெரிய அபாயத்திலிருந்து தமிழ் நண்பர்கள் தப்பியிருக்கிறார்கள் என்பது இவரின் கருத்து. இந்தக் கருத்தை பொலீஸாரும் பலமாக ஆமோதிக்கிறார்கள். காரணம், 'பழுதடைந்த நிலையிலிருக்கும் அந்தப்பழைய படகு (கப்பலா அது?... படகு தான்!) அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து கனடா போய்ச் சேரவே முடியாது. நடுக்கடலிலேயே படகு மூழ்கியிருக்கும்,என்கிறார்கள். பாதுகாப்பற்ற இப்படகில் பயணம்செய்யத் திட்டம் போட்டவர்களைக் கடிந்துகொள்ளும் ஜெர்மன் பொலீஸார், மிகுந்த அனுதாபத்துடன் இந்தப் பிரச்சினையை அணுகுகின்றனர்.

புதிய புகலிடம்தேடிப் புறப்பட்டவர்களைப் பள்ளியொன்றுக்கு அழைத்துச் சென்றுஉணவளித்து விட்டு, பஸ் வண்டிகளில் ஏற்றி அவரவர் எந்தெந்த ஊர்களிலிருந்து வந்தார்களோ அந்தஊர்களுக்கேஅவர்களைத்திருப்பி அனுப்புகின்றனர். ஏக்கமும், ஏமாற்றமும் அகதிகள்முகத்தில்பிரதிபலித்தன. கனடா செல்லப் பயணக் கட்டணமாகத் தலைக்கு 5,000 ஜெர்மன் மார்க்குகள்(சுமார்3,650 அமெரிக்க டாலர்கள்) வசூலிக்கப்பட்டதாக பொலீஸாருக்கு தகவல் வசூலித்தவர்யார் என்று விசாரணையை மேற்கொண்டுள்ள போலீஸ் அதிகாரி ஸ்காட்கே, "தாவூத் முகம்மது லெப்பை என்பவரே இந்த சூழ்ச்சி வலையைப் பின்னியவர்" என்றுகூறுகிறார். அகதிகளான தமிழர்களைச் சுரண்டிஇன்னொருதமிழ்பேசும்மகனே வேட்டையாடுவது மிகவும் அக்கிரமம்' என இங்கே பத்திரிகைகள் விமர்சிக்கின்றன.

அதுசரி... யார் இந்த முகமது லெப்பை? ஜெர்மன் பெண்மணியான லுட்டாவை மணம் செய்து கொண்டதனால் ஜெர்மனியில் குடியுரிமை பெற்றுள்ள லெப்பைக்கு 38 வயதாகிறது. இவர் இலங்கை மட்டக்களப்பைச் சேர்ந்தவராம் ஹம்பக் நகரில் பஸ் டிரைவராகப் பணியாற்றுகிறார்.

பொலீஸார் லெப்பையைத் தேடிய போது அவர் தலைமறைவாகியிருந்தார். எனினும் தொடர்ந்து தேடி ஒரு வாரத்துக்குள் லெப்பையைக் கைதுசெய்து விட்டனர். லெப்பை இப்போது ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

இதற்கு முன்பே1986ம் ஆண்டு இதே மேற்கு ஜெர்மனியிலிருந்து ஒரு படகில் புறப்பட்டனர் 155 தமிழர்கள். அவர்களைக் கனடா நாட்டின் ஆழநீர்ப்பரப்பில் சிறிய இரண்டு மிதவைப் படகுகளில் அவசர அவசரமாக இறக்கிவிட்டு ஜெர்மன் படகு மறைந்தது. தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த மிதவைப் படகுகளையும் தமிழர்களையும் நியூபவுண்ட்லாந்து என்ற இடத்தில் கனடாநாட்டு மீனவப் படகுகள் கண்டு மீண்டும் கரை சேர்த்தன. அச்செய்திகள் அமர்க்களமாக பத்திரிகைகளில் அடிபட்டன. அந்தப் பயணத்தை ஏற்பாடு செய்த கூட்டத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் கடந்த மாதம் லெப்பை கைதானவுடன் 1986 ல் நடந்த அந்தக் கப்பல் பயணம் பற்றிய துப்பும் துலங்கியிருக்கிறது. 'அப்போது தமிழர்களைக் கனடாவுக்குக் கடத்தியதும் நான்தான்' என்று ஒப்புக்கொண்டார். லெப்பை:

ஆமாம், ஜெர்மெனியில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு அப்படியென்ன குறை? உயிரைப் பணயம் வைத்து இவர்கள் கனடா நாட்டை நோக்கி கடல் தாண்டும் காரணம் என்ன?

இத்தமிழர்கள் ஜெர்மனியில் சிறைச்சாலையில் வாழும் உணர்வுடன் வாடுகின்றனர். குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே அவர்கள் வசிக்க வேண்டும் என்று கட்டுப்பாடு. வெளியே செல்வதற்கு அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். ஐந்தாண்டுகளுக்குமேல் இங்கு தங்கியிருந்தவர்களுக்குக் கூட வேலை செய்யும் உரிமையில்லை, என்றாவது குடியுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை மாதா மாதம் அரசாங்கம் தரும் சிறிதளவு உதவிப் பணத்தைக் கொண்டே ஜீவனம். இந்தக் கட்டுப்பாடுகளில் விளைந்த விரக்தியின் வெளிப்பட்ட கடல் வழியே கனடா பயணம்!

# "நாய், நன்றியுள்ள பிராணி"

## ஜெயலலிதாவுக்கு சூடான பதில்

சென்னை, ஜூலை.13 "நாய் நன்றியுள்ள பிராணி" என்று ஜெயலலிதாவுக்கு அந்த அணி அ. தி. மு. க. பொருளாளரான முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு பதில் அளித்தார்.

அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு திருநாவுக்கரசு அளித்த பதில்களும் வருமாறு:-

### கலைப்பு

கே: நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நீங்களெல்லாம் உறுப்பினர்களாக உள்ள அரசியல் விவகார குழு கலைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதே?

ப: கட்சியின் அரசியல் விவகார குழு, பொதுக்குழுவின் அங்கிகாரம் பெற்று, பொதுக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது அதன் தலைவர் டாக்டர் நாவலர், இதற்கு மேல் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை.

சே: கட்சியின் பொருளாளராக நீங்கள் இருக்கிறீர்கள். கட்சிப்பணப் பணம் பொதுச் செயலாளரின் சொந்தக்கணக்கில் வைக்கப்பட்டு இருப்பதை கட்சிக்காரர்கள் குறை சொல்கிறார்கள் இதை சுட்டிக்காட்டிய போது "தெருவில் குரைக்கும் எல்லா நாய்களுக்கும் நான் பதில் சொல்ல வேண்டியது இல்லை" என்று ஜெயலலிதா கூறி இருக்கிறாரே?

ப. நாய் நன்றிஉள்ள பிராணி.

மேற்கண்டவாறு திருநாவுக்கரசு கூறினார்.

### கட்டாக்காலி தொல்லை

இருபாலைப் பகுதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இரவு வேளைகளில் இவை பயிர்செய்கை நிலத்துனுள் புகுந்து காய்கறிபயிர்களை தின்று நாசப்படுத்துகின்றன.


இதோ!

உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த

# லீடா

## முழு ஆடைப்பால்மா

வசதியான பக்கட்களில்




IMAGE

விநியோகஸ்தர்கள்,
**மில்லர்ஸ் லிமிடெட்**
த. பெ. இல: 100,
கொழும்பு - 1


400 கிராம் பககட் ரூ 29/90
1கி. கிராம் பக்கட் ரூ 85/-
2கி. கிராம் பக்கட் ரூ 162/-

**லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்**



★ ஷப்ரு ★

யூனிகோ பிஞன்ஸ் லிமிடெட் வழங்கும் நிலையான முதலீட்டுத் திட்டம்




**புதிய வட்டி விபரங்கள்**

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ... | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ... | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 18 வீதம் |
| 24 மாதங்கள் | 18 வீதம் | 20 வீதம் |
| 36 மாதங்கள் | 20 வீதம் | ... |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்

★ பணமாக ★ காசோலையாக ★ வங்கிக் கணக்கூடாக

**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984 —> 85 | 1985 —> 86 | 1986 —> 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்து முன் தேறியலாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்திய பின்தேறியலாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | — — — — | — — — — | — — — — |

இயக்குநர் சபை

எஸ். பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
ஸீ. பி. ஈ. கருணரட்ண,
(சட்டத்தரணி)

ஜே. டி. நவரட்ணம், A. I. B (Lon)
ஆர். பாலசுப்பிரமணியம்,
ஓ. சி. எம். ஹசன்பாரி, B. A.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

# ஷப்ரு நிதி நிறுவனம்

Shabra Unico Finance Limited,
61, New Bullers Road,
COLOMBO - 4.
Telephone: 589310, 500576.

யாழ் முகவர்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 19. 6. 1965

தாயக மண்ணில் 26. 6. 1987

### அ. பொன்னுத்துரை ஏகாம்பரம்

(சாவகச்சேரி இந்துக்கல்லூரி உயர்தர மாணவன் கண்ணன்)

திதி- 13-7-1988

பத்துத் தடவை பாடைவராது
பதுங்கிக் கிடக்கும் வேங்கையே தமிழா
செத்து மடிவது ஒரு முறை என்று
தமிழ் மக்களைக்காக்க ஆயுதம் ஏந்தி
சிரித்துக் கொண்டே போர்க்களம் சென்று
வீரமாய் எம் இனம் காக்கும் வேங்கையர்
தீரமாய் வளளாய் தொடுத்த சமரில்
வந்தபடைகள் தூர நின்று ஏவிய குண்டினை
மார்பினில் ஏற்று இம் மண்காத்த தியாகி
லெப்டினன் விஜி நீ தமிழர் மண்ணை
மீட்டெடுக்க மறுபடியும் பிறக்க வேண்டுமென
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

-பெற்றோர், நண்பர்கள்

மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

(C 5639)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



அமரர்
### முருகுப்பிள்ளை வரத்துங்கன்
(உடுப்பிட்டி)

தோற்றம்: 13-01-1913 மாற்றம்: 13-07-1986

உலகமுகத்தின் மெழுகென உருகிநிற்கும் மனைவியை மறந்து நிலையான கன்னிய வாழ்வு வாழும் கடவுள் அடியானும் மைந்தனைத் துறந்து பாசமுடன் ஒன்றிணைந்த சகோதர சகோதரியரை வாடிவதங்க விட்டு, ஊரையும் உறவையும்-என்றும் உம்மைப் போற்றும் உற்றோரையும் உதறித் தள்ளி ஆசையுடன் அன்பு வைத்த அயலாரை அலறி அழ வைத்து. ஓடினையோ? ஒப்பற்ற அவ்வுலகம் நிசமென்று வாழ்வது மாயமெனும் தத்துவத்தைப் படித்துணர்ந்து அதற்கேற்ப வாழ்ந்து காட்டிய தாழ்வற்ற தத்துவ ஞானியே! கொடை வள்ளலே!! அன்புக்கோர் மாமாவே! அரியதொரு செஞ்சுடரே! கண்ணை இமை காப்பது போல் காத்தாயே! எம்மை எல்லாம் வளர்த்தாயே! என்னை - வாழ வைத்தாயே! என்னை;- நான், பொறியியற்றுறையில் முதுபட்டம் பெறவேண்டும் என்னும், இல்லை இல்லை; அதற்கும் அப்பால்-கலாநிதிப பட்டமும் பெறவேண்டும் என்றும் துடியாய்த் துடித்தாயே! தூங்காது கண் விழித்து, ரியூற்றறி தோறும் கொண்டு திரிந்தாயே! நின் நினைவை நிறைவேற்றி நிற்கின்றேன். நிகரற்ற அரிய மாமா, பட்டமளிப்பு வைபவத்தைப் பார்த்து மகிழ பூரிப்போடு நின் ஆவியில் மெய்யுருவெடுத்து வந்திருப்பாய் என எண்ணி கட்டழகா நின திருவுருவை துருவித் துருவித் தேடினேனே! பாசமுள்ள மாமாவைக கிட்டவுள்ள இடமெல்லாம் தேடியும் அத்திருவுருவைக் காணாது; ஐயகோ! துடியாய்த் துடித்தேனே, தூண்டில் மீன் போல் தவித்தேனே! மாமா இரு வருடம், இரு நிமிடம் போல இணைந்தோடி விட்டாலும், ஈராயிரம் வருடம் இசைந்திசைந்து சென்றாலும்,

உங்கள் நினைவே எம் மனத்தின
நினைவாக என்றும் நிலைத்திருக்குமே!!

உங்கள் பிரிவால் வாடும் மருமகன்:
R. A. RAJATHUNGHAN. (U. K.)

(5201)

யுத்த நிறுத்தம் ஏற்படுமானல் அடுத்த கட்டமாக

# சகல தமிழ்க் குழுக்களையும் உள்ளடக்கிய மாநாட்டை இந்தியா கூட்டவேண்டும்

## ஈ. பி. ஆர். எல். எப். கோரிக்கை

மட்டக்களப்பு ஜூலை 13

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - இந்திய தரப்பினருக்குமிடையில் ''யுத்த நிறுத்தம்'' பிரகடனப்படுத்தப்படுமானல் இந்திய தரப்பினர் தமது அடுத்தகட்ட நடவடிக்கையாக சகல தமிழ்க் குழுக்களையும் உள்ளடக்கிய ''சர்வ தமிழ் அமைப்புகள் மாநாடு ஒன்றைக் கூட்ட முன்வர வேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எப். இயக்க மட்டக்களப்பு, அம்பாறை அமைப்பாளரும், மத்திய கமிட்டி உறுப்பினருமான திரு. பி. கிருபாகரன் தனது அலுவலகத்தில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலை தொடர்பாக இம் மாநாட்டில் விளக்கம் அளிக்கப்பட்டது. பிராந்தியக் கமிட்டி உறுப்பினர் நிவாஸ்ூம் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

திரு. கிருபாகரன் செய்தியாளருக்கு விளக்கமளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் தீர்வின் பின்பு தனிநபரோ அல்லது குழுவினரோ ஆயுதம் வைத்திருக்க அனுமதிப்பது அமைதியைச் சீர்குலைப்பதாகவே அமையும்.

மக்கள் அமைதியுடன் வாழ வேண்டுமானல் தனிநபர் உட்பட எத்தரப்பினரும் ஆயுதம் வைத்திருக்க அனுமதி அளிக்கப்படக்கூடாது.

போர் நிறுத்தத்தின் பின்பு இயக்க மோதல்கள் ஏற்படுமானல் அவற்றை இந்தியா எப்படிக் கட்டுப்படுத்தும்? என்ற சந்தேகம் எமது இயக்கம் உட்பட ஏனைய இயக்கங்கள் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எத்தரப்பிலும் இயக்க மோதல்களை நாம் அனுமதிக்கக்கூடாது. இவ்விடயத்தில் இந்தியா மிக அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

யுத்தநிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்பு ''சர்வ தமிழ் அமைப்புக்கள் மாநாடு'' ஒன்றைக் கூட்ட இந்தியா முன்வரவேண்டும்.

இம் மாநாடு மூலம் இயக்க முரண்பாடு நீக்கப்பட்டு பரஸ்பரம், சமரசம் உருவாக வழிபிறக்கும்.

அதுமட்டுமன்றி இலங்கை, இந்திய உடன்படிக்கையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம், திருப்தியின்மை ஆகியவற்றைத் தீர்க்கவும், நிவர்த்தி செய்யவும் இம்மாநாடு உதவுவதாக அமையும்.

உண்மையான சமாதானம் உருவாக இந்தியா செயல்படுவதாக இருந்தால் இயக்கங்களிடையே சமாதானத்தை உருவாக்கும் பணியிலும் இந்தியா இதய சுத்தியுடன் செயல்பட வேண்டும்.

சகல தமிழ் அமைப்புகளும் புனர்வாழ்வு பணியில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்புகளையும் இந்தியா ஏற்படுத்தல்வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் பிரகாரம் ஆயுதங்களை பறிமுதல் செய்யும் பணியில் இந்தியா ஈடுபட்டுள்ளது

இந்தியா தன் பணியைச் செய்கிறது. ஆனல் இலங்கையோ தன் பணியைச் செய்வதில் காலம் தாழ்த்துகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் அமைதிக்கான சூழ்நிலை உருவாகுமானல் ஜனநாயக ரீதியில் தேர்தல் மூலம் மக்கள் தலைமைத்துவம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அதற்கு முன்னேடியாக 1981ஆம் ஆண்டு குடியிருப்பு இடாப்பு அடிப்படையில் 1988ம் ஆண்டு வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட வேண்டும்.

எமது அமைப்பு த. வி. கூ. உட்பட எந்த ஒரு அமைப்புடனும் கூட்டு முன்னணிஅமைப்பது குறித்து எவ்வித உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை.

இப்படி அவர் கூறினர். (இ-21)

# ஜே. வி. பி. கைதிகள் பதிலளிக்க மறுப்பு

கொழும்பு, ஜூலை 13

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சுமார் எண்ணூறு ஜே. வி. பி. இயக்க சந்தேக நபர்கள் அரசு வழங்கிய கேள்விக் கொத்துக்கு பதிலளிக்கமறுத்து விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பெலவத்த, வெலிக்கட ஆகிய இடங்களில் இச்சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சநதேகநபர்களை விசாரணை செய்து புனர்வாழ்வு அளிக்க அரசு முடிவு செய்து, அது பற்றி நடவடிக்கை எடுக்க ஒரு கமிட்டியையும் நியமித்தது.

ஓய்வுபெற்ற நீதியரசர் டி. ஜி. ஜெயலத் கமிட்டியின் தலைவர்.

சந்தேக நபர்களுக்கு இக்கமிட்டி கேள்விக் கொத்து ஒன்றை அனுப்பியது. அதற்கு அவர்கள் பதிலளிக்க மறுத்து விட்டனர். (உ-எ)

## தகவல் தந்தால் ரூபா ஒரு லட்சம்

கொழும்பு, ஜூலை 13

தோட்ட சுப்ரிண்டன், உதவி சுப்ரிண்டன்கள் இரண்டு பேர் கொலைபற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என்று ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை அறிவித்திருக்கிறது.

தென் இலங்கையில் சில தினங்களுக்கு முன்னர் இனந்தெரியாத நபர்கள் இத்தோட்ட அதிகாரிகளைக் கொலை செய்துவிட்டு அவர்களிடமிருந்து 4 லட்சம் ரூபா சம்பளத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்பது தெரிந்ததே. (உ-எ)

## தங்கம் இறக்குமதி கட்டுப்பாடு தளர்வு

கொழும்பு, ஜூலை 13

தங்கம் இறக்குமதி செய்வதில் உள்ள கட்டுப்பாடு தளர்த்தப்படவுள்ளது என்று அரசு உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

தீர்வையற்ற வர்த்தக நிலையங்களில் வெளிநாட்டுச் செலாவணியைப் பயன்படுத்தி தங்கத்தை வாங்கக்கூடிய முறையில் கட்டுப்பாடு தளர்த்தப்படும் என்று தெரியவருகிறது.

தங்கம் கடத்தப்படுவதையும், பதுக்கப்படுவதையும் தடுக்கும் நடவடிக்கையாகவே இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட விருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-9)

# தேர்தலுக்கு முன் ஜெயலலிதாக்கூட்டம் கலைந்துவிடும் என்கிறர் காளிமுத்து

தேர்தலுக்கு முன் ஜெயலலிதா கூட்டம் கலைந்து விடும் என்று காளிமுத்து கூறினர்.

திருச்சியில் காளிமுத்து பேட்டி அளித்தார். அதன் விவரம் வருமாறு:-

### மூப்பனருக்கு பதில்

கேள்வி: ஊழல் இல்லாத ஆட்சி அமைப்போம் என்று மூப்பனர் கூறி வருகிறரே?

பதில்:- ஊழலை ஒழிப்பேன் என்று அவர் சொல்லுவது சாம்பல் கொள்ளைக்காரன் திருட்டைத் தடுப்பேன் என்று சொல்லுவது போல் இருக்கிறது.

### கூட்டம் கலையும்

கேள்வி:- ஜெயலலிதா அணியின் அரசியல் விவகார குழுவில் ஏற்பட்ட குழப்பம் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்; அதற்குப் பெயரே அரசியல் விவகாரக் குழு விவகார குழுவில் விவகாரம் ஏற்படுவது வியப்புக்குரியது அல்ல. கொள்கைப் பற்றேஇல்லாமல் நாற்காலி பைத்தியக்காரர்களாக இருக்கிற ஜெயலலிதா கூட்டம் தேர்தலுக்கு முன்பே கலைந்து விடும் என்பதற்குஇது அறிகுறி

### மாயாஜால வேலை

கேள்வி: மத்திய மந்திரி சபை மாற்றம் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: அலகாபாத் தேர்தல் வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்காகவும் மக்களை திசைதிருப்புவதற்காகவும் ராஜீவ் காந்தி செய்யும் மாயாஜால வேலை இது. தலைவலியை தீர்க்க தலையணையை மாற்றிப் பயன் இல்லை.

### அழிவுக்கு முன்னுரை

வி.பி. சிங்கின் வெற்றி காங்கிரஸ் ஆட்சியின் அழிவுக்கு முன்னுரை எழுதியிருக்கிறது. இது தொடரும்.

இவ்வாறு அவர் கூறினர். [எ-10]

# தலைமைத்துவத்தை ஏற்கும் ஆற்றல் கூட்டுறவுச் சங்கம் மூலம் ஏற்படுகிறது

நெடுந்தீவு ஜூலை 13

மாணவர்கள் கூட்டுறவு அறிவைப் பெறுவதற்கும் தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்படக்கூடிய ஆற்றலைப் பெறுவதற்கும் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழிவகுக்கும்.

நெடுந்தீவு றோ. க. மகளிர் பாடசாலைக் கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய நெடுந்தீவு பிராந்தியக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஞா. கேதீஸ்வரன் இவ்வாறு கூறினர்.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பதிவுச் சான்றிதழை வழங்கினர். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம்.

''கூட்டுறவின் சிறப்பு அதன் கொள்கைகளில் இருக்கிறது. மக்களின் நலனை மையமாகக் கொண்டு செயல்படும் இந்த இயக்கத்தின் மூலம் உறுப்பினர்கள் சிக்கனமாகவும் சிறப்பாகவும் வாழமுடியும்'' என்று அவர் கூறினர்.

கல்லூரி அதிபர் சங். சகோதரி மேரி லொறன் டீன தலைமையில் வைபவம் நடைபெற்றது.

அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சேமிப்புப் புத்தகங்களைக் கையளித்து வண. பிதா. ரூபன் மரியாம்பிள்ளை உரையாற்றினர். திரு. எம். எஸ். ஒ. ஒஸ்வேல்ட் உட்பட பலர் உரையபற்றினர். (இ-111)

## கலைவாணி வித்தியாலய இல்லப்போட்டி

கோப்பாய் ஜூலை 13

கைதடி கலைவாணி வித்தியாசாலையின் வருடாந்தஇல்லவிளையாட்டுப்போட்டி இன்று13 ஆம் திகதிகாலைநடைபெறும். பிரதம விருந்தினராக கைதடி நவீல்ட் அதிபர் டேவிற் கலந்துகொள்வார். (இ-72)

# தேர்தலை நடத்தவே காங்கிரஸ் விரும்புகிறது

## அமைச்சர் அருணசலம்

மதுரை, ஜூலை 13

தமிழ் நாட்டில்சட்டப பேரவைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்றே பிரதமர் ராஜீவ் காந்தி விரும்புவதாக மத்திய தொழில் துறை இணை அமைச்சர் எம், அருணசலம் நிருபர்களிடம் கூறினர்.

தமிழக சட்டப்பேரவைத்தேர்தலில்இ காங்கிரசுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய டி. வி. ராமர், அருண் கோவிலை அழைப்பீர்களா என்று கேட்டதற்கு 'அப்படி அவர் பிரசாரம் செய்ய வந்தால் யாரும் அவரைத் தடுக்க முடியாது' என்று கூறினர். இ. காங்கிரசுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய வருபவர்கள் தாங்களாகவே விருப்பப்பட்டு வருகிறர்கள் என்றும் அவர் கூறினர். (எ-4)

## விவசாயிகளுக்கு விண்ணப்பப் படிவங்கள்

கோப்பாய் ஜூலை 13

கடந்த வருட அசம்பாவிதங்களின் போது பாதிப்புற்ற விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களினல் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப் பட்டு வருகின்றன. (இ-72)

யாழ் மாவட்டத்தில்

# ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் திருத்தப்படவுள்ள 64 பாடசாலைகளின் விவரம்

கொழும்பு, ஜூலை 13

ஆசிய அபிவிருத்திவங்கியின் நிதியுதவி பெறும் யாழ்- மாவட்டப் பாடசாலைகளின் பெயர் விவரங்களை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம் பின்வரும் பாடசாலைகள் உடனடியாக நிவாரணம் பெறவிருக்கின்றன.

1. சென் ஹென்றீஸ் கல்லூரி2. நடேஸ்வராக் கல்லூரி 3. வேம்படி மகளிர் கல்லூரி 4. யாழ்- மத்திய கல்லூரி 5.யாழ்- இந்துக்கல்லூரி 6. யூனியன் கல்லூரி 7. மெதடிஸ்த மகளிர் 8. வல்வை மகளிர் வித்தியாலயம் 9. வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 10. வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 11. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 12. தேவரையாளி இந்துக்கல்லூரி 13. கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம் 14. அச்சுவேலி மகா வித்தியாலயம் 15. சென். திரேசா மகளிர்கல்லூரி 16. வசாவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 17. ஒட்டகபுலம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 18. நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை 19. கொட்டடி நமசிவாய வித்தியாலயம் 20. பெரிய கடை பாரதி பாஷ்ய வித்தியாலயம் 21. ஹாட்லி கல்லூரி 22. சிதம்பராக் கல்லூரி 23. வதிரி சேக்றட் காற் கொன்வெட் 24. வரணி மகா வித்தியாலயம் 25. பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் 26. தியாகராசா மகா வித்தியாலயம் 27. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் கல்லூரி 28. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பெண்கள் கல்லூரி 29. உடுப்பிட்டி சைவபிரகாச வித்தியாலயம் 30 கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 31. வல்வை சிவகுரு வித்தியாலயம் 32. தொண்டமனறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலயம் 33. வல்வெட்டித்துறை [illegible] பாடசாலை 34. கெருடாவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை 35. விக்னேஸ்வராக் கல்லூரி 36. கரவெட்டிஸ்ரீநாரத வித்தியாலயம் 37. கிரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் 38. மயிலிட்டி தெற்குஞானோதயா வித்தியாலயம் 39. தந்தைசெல்வா ஆரம்பப் பாடசாலை 40. காங்கேசன் துறை மகா வித்தியாலயம்

41. பொன் பரமநாதர் வித்தியாலயம் 42. அருணோதயாக் கல்லூரி 43. கட்டுவபுலம் மகா வித்தியாலயம் 44. வீமன் காமம் மகா வித்தியாலயம் 45. வல்வெட்டிஇந்து தமிழ்க் கலவன் பாடசாலை 46. வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் வித்தியாலயம் 47. நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை 48. பொலிகண்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை 49. புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை 50. சித்திவிநாயகர் வித்தியாலயம் 51. [illegible] வித்தியாலயம். 52 இக்கம் சித்திவிநாயகர் வித்யாலயம். 53 சென் தோமஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் 54 சென் அன்ரனீஸ் கல்லூரி. 55 கணேஷானந்த வித்தியாலயம் 56 ஊர்காவற்றுறை சென் மேரீஸ் மகளிர் பாடசாலை. 57 கன்வென்ட் மகா வித்தியாலயம். 58 சென் ஜேம்ஸ் கத்தோலிக்க மகா வித்தியாலயம். 59 சென் றேக் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 60 இடைக்காடு மகாவித்தியாலயம்.

61, புன்னாலைக் கட்டுவன் அமெரிக்கன் மிஷன் தமிழ்ப்பாடசாலை 62. வசாவிளான் ஸ்ரீ வேலும்பிள்ளை வித்தியாலயம் 63, உயர்நிலைப் போதனா கல்லூரி(College of Secondary Education)

மேற்குறிப்பிட்ட பாடசாலைகள், கல்லூரிகள் யாவும் பெறும் புனரமைப்பு நிவாரணத் தொகைகளை தனித்தனியே வெளியிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-6)

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



அன்புச் செல்வன்
### தியாகராசா திலீபன்

தாயின் மடியில்: 8-8-83 இறைவன் அடியில்: 13-7-87

அன்பின் மகனே திலீபா! தலைமகனாய் இருந்து தாங்குவாய் என்றிருந்தோம்! சிரிப்பின் நிறைமதியாய் சீராட்டுவாய் என்றிருந்தோம்! உன் மழலையில் எங்களையே மறந்திருந்தோம்! என்ன நினைத்து எம்மை விட்டுப்பிரிந்தாயோ! நெஞ்சம் பொறுக்குதில்லையே திலீபா! உயிர் உள்ள வரை உன் நினைவுகள் அகலாது.

பிரிவுத்துயரால் கண்ணீரில் மிதக்கும்:
அப்பா, அம்மா, ஆருயிர் பிரியா,
உற்றோர், உறவினர்.

ஸ்ரீபிரியா,
சிவன் கோவில் வீதி,
நல்லூர்.

(5231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலிப் பகுதியில் திருட்டு

திருநெல்வேலி, ஜூலை 13

திருநெல்வேலிப் பகுதியில் பல திருட்டுச் சம்பவங்கள் ஊரடங்கு நேரத்தில் நடைபெற்று வருகின்றன.

சென்ற வாரம் முத்துமாரி அம்மன் வீதியில் டாக்டர் ஒருவரின் வீட்டில் இருபதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், பொருள்களும் திருடப்பட்டன.

டாக்டரும், மனைவியும் மரணவீட்டிற்குச் சென்றிருந்த சமயம் கூரையை பிரித்து இத்திருட்டு நடைபெற்றது. கோஷ்டியில் சிறுவர்களும் ஈடுபடுத்தப் பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப் படுகிறது. (இ-143)

NIRU TUTION CENTRE,
Kondavil.
A/L 90 யூலை 16ல்
3.00 p.M
கலை, வர்த்தகம்
திருவாளர்கள்
★ சின்னத்தம்பி ★ மரியதாஸ்
★ தேவா ★ வேலா
★ அருள்நங்கை ★ S.S மனோகரன்
★ குழந்தை ★ மஃறூப்
★கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே ஒரு நிறுவனம்.
A. A. T. (Sri Lanka) Stage 1
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
(C 5753)

கிளிநொச்சி

## பஸ்நிலைய-சந்தைப் பகுதியில்
## அங்காடி வியாபாரிகள்
## தொல்லை அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜூலை.13

கிளிநொச்சி பஸ் நிலையப் பகுதியிலும், கிளிநொச்சி சந்தைக்கு அருகில் உள்ள வீதிகளிலும் அங்காடி வியாபாரிகளின் தொல்லை அதிகரித்து வருகிறது.

இதனால் வீதியில் நெருக்கடி ஏற்படுவதுடன் விபத்துகள் ஏற்படவும் ஏதுவாகிறது.

இது தொடர்பாக கிளிநொச்சி அபிவிருத்திச் சபை உயர் அதிகாரி ஒருவரைக் கேட்டபோது அவர் கூறியதாவது:—

தற்போதைய சிரற்ற சூழ்நிலையை சிலர் தமக்குச் சாதகமாகப் பாவிக்கிறார்கள். ‹ முக நிலை ஏற்பட்டதும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் அப்புறப்படுத்தப்படுவர்.

எனவே இதை உணர்ந்து மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு அங்காடி வியாபாரிகளும், சந்தை வியாபாரிகளும் நடந்துகொள்ளவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

கிளிநொச்சியில் கடந்த கால அசம்பாவிதம் காரணமாக கிளிநொச்சி பழைய சந்தைக் கட்டடங்கள் இடிக்கப்பட்டன.

அதன் பின் புதிய சந்தைக் கட்டடத்தில் பொதுமக்கள் சந்தையை ஆரம்பித்தனர்.

ஆனால் இப்பொழுது இச்சந்தைக் கட்டடங்களிலும், வளவிலும் இந்திய ராணுவம் நிலைகொண்டு முகாம் அமைத்துள்ளது.

இதனால் பொதுமக்கள் பழைய சந்தை இருந்த இடத்தில் மரநிழல்களிலும், தமது சுயமுயற்சியால் கொட்டில்கள் அமைத்தும், வீதி ஓரங்களிலும் வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர். (இ-76)

## மின் பற்றுக்குறை

கோப்பாய், ஜூலை 13

கோப்பாய் அபிவிருத்திச்சபைக்கு உட்பட்ட சூசையப்பர் கோவில் பகுதிகளில் மின்பற்றுக்குறை காரணமாக மின்குமிழ்கள் மங்கலாகவே எரிகின்றன. (இ-72)

## சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

''சுண்டங் காய் காற்பணம் சுமைகூலி முக்காற் பணம்'' என்ற பழமொழி யாழ்—சுகாதார திணைக்களத்தைப் பொறுத்தவரை உண்மையாக உள்ளது.

கடந்த சில வருடங்களாக யாழ்—சுகாதாரத் திணைக்களத்துக்கு வருடா வருடம் லொறிக்கூலியாக 7 லட்சம் ரூபா வரை செலவாகி உள்ளது.

கொழும்பிலிருந்து மருந்து வகைகளை எடுத்து வரவும், இங்குள்ள மருந்துகளை வடபிராந்தியத்தின் பல பகுதிகளுக்கும் விநியோகிக்கவுமே இந்தச் செலவு ஏற்பட்டது.

ஆனால்ஒரு லொறியை வாங்க 3 லட்சம் ரூபா வரையே செலவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப திணைக்கள அதிகாரிகள் சுகாதார அமைச்சுக்கு இதுபற்றி அறிவித்திருந்தும் இதுவரை எந்தப்பதிலும் கிடைக்கவில்லையாம். (இ-9)

## முற்றாக மூடப்பட்டது

கிளிநொச்சி, ஜூலை.13

கிளிநொச்சியில் ஏற்பட்ட சிவில் நிர்வாகச் சீர்குலைப்பைத் தொடர்ந்து செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் இயங்கி வந்த கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை அலுவலகம் கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் முற்றாக மூடப்பட்டுள்ளது. (இ-76)

## உதயநகர் மீன் வியாபாரி பிணமாக மீட்கப்பட்டார்
### உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயம்

கிளிநொச்சி, ஜூலை13

பூப்பு நீராட்டு விழாவுக்குச் சென்று விட்டு இரவு விடுதிரும்பிய மீன் வியாபாரி மறுநாள் பிணமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் கிளிநொச்சி உதயநகர் என்னும் இடத்தில் இடம் பெற்றது.

கடந்த ஏழாம் திகதி இரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் பாரதிபுரம் வாசியான திரு ப. இராசரத்தினம் (39 வயது) என்பவரே மரணமானவர் ஆவர்.

சம்பவதினம் தனது மீன்வியாபாரத்தை முடித்துவிட்டு இவர் தனது வீட்டுக்குச் சென்றார். பின்பு தனது உறவினர் ஒருவரது வீட்டில் நடைபெறும் பூப்பு நீராட்டு விழாவுக்குச்சென்றார்.

அங்கு நடைபெற்ற வைபவங்களில் கலந்துகொண்டுவிட்டு இரவு வேளை சுமார் 9மணியளவில் சைக்கிளில் தமது வீடுநோக்கிப் புறப்பட்டார். மறுநாட்காலை வீதியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடந்தார்.

இறந்தவரது மனைவி திருமதி இராசரத்தினம் மரண விசாரணையின் போது சாட்சியம் அளித்தார்.

கிளிநொச்சி பதில் நீதவான் திரு. ஏ. ஏ. அருள்நாயகம் மரண விசாரணையை மேற்கொண்டார்.

இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி மரணம் சம்பவித்துள்ளதாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## 4 தமிழ் மாவட்டங்களுக்கு செஞ்சிலுவை நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை13

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணம் வழங்கவுள்ளது.

இதன் காரணமாக இதுவரை காலமும் பிரஸ்தாப மாவட்டங்களுக்கு யாழ்.செஞ்சிலுவைச்சங்கம்ஊடாக வழங்கப்பட்டுவந்தநிவாரணங்களை நிறுத்திக்கொள்ளும் படி பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமான கடிதம் ஒன்று அண்மையில் கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலிருந்துயாழ்.செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்டமாவட்டங்களில்செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் இயங்காத காரணத்தால் இதுவரை இந்த மாவட்டங்களுக்கு செஞ்சிலுவைச் சங்க நிவாரணங்கள் கிடைப்பது தடைப்பட்டிருந்தது.

இதன் காரணமாக செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையேஇதற்கான நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது அந்தந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் ஊடாக நிவாரணப் பணிகளை மேற் கொள்ள நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது, (உ-9)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு
SAUDI OPERATION & MAINTENANCE COMPANY LIMITED
S. O. M. C.

| | | | |
|---|---|---|---|
| 1. | Hospital Cleaners Male | 456 | SR |
| 2. | Hospital Cleaners Females | 456 | SR |
| 3. | University Cleaners Males | 456 | SR |
| 4. | Masons | 600 | SR |
| 5. | Carpenters | 600 | SR |
| 6. | Drivers | 700 | SR |
| 7. | A. C. Mechanics | 650 | SR |
| 8. | Electricions | 650 | SR |
| 9. | Plumbers | 650 | SR |
| 10. | Mechanics | 650 | SR |

AGE: 21 — 49 வரை
15-07-88றகு முன்னர் பிரயாணம் செய்யலாம்.
KUWAIT Cleaners
1. Male Hospital Cleaners - 30 KD
AGE: 18 — 49 வரை
● மு.கு: முற்பணம் யாதும் அறவிடப்படமாட்டாது. தங்கள் விசா பெற்றுத்தந்த பின்பு தங்கள் செலவுத் தொகையை அறவிடப்படும். மேலும் எங்கள் நிறுவனத்தால் பின்வருவோரை மட்டும் SUB AGENT ஆகநியமனம் செய்துள்ளோம். இவர்களைத் தவிர வேறு ஒருவரிடமும் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம்.
1. S. KOMALESWARAN, Station Road, Kokuvil
2. T. NAGARAJAH, 40/1, Ramanathan Road, Jaffna
3. T. JEYARATNAM, 1/4, Convent Road, Jaffna
4. K. NAGASIVAKUMARAN, Araly North, Vaddukoddai
5. V. R. SADACHARAM, Maravanpulo, Chavakachcheri.
இப்படிக்கு
S. THAMILVANAN
DIRECTOR
T.V. TRAVELS & TOURIST
BROWN ROAD,
(Kokuvil Railway Station Front)
KOKUVIL.
(C 5739)

பயணிகள் பஸ் மறிப்புப் போராட்டம்

## மட்டக்களப்பு -யாழ் பஸ் கட்டணம் குறைக்கப்படும் என்று உறுதி மொழி

மட்டக்களப்பு ஜூலை 13

மட்டக்களப்பு- யாழ்ப்பாணம் இ. போ. ச பஸ்கட்டணம்வழமைக்கு கொண்டு வரப்பட வேண்டுமென பஸ்பயணிகள் பஸ் நிலையத்தில் நடத்திய போராட்டத்தின் விளைவாக மேற்படி பஸ்கட்டணம் வழமைக்கு கொண்டு வரப்படுமெனஇ.போ.ச.டிப்போ அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

வடக்கு – கிழக்கு வன்செயல்கள் காரணமாக கடந்த இரு வருடங்களாக இருமடங்கு (100) கட்டணம் அறவிடப்பட்டது.

வழமையான கட்டணம் ரூ 46. 25 சதம் ஆகும். இதனால் பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

மேற்படி கட்டணம் பயணிகளால் கடந்த பல மாதங்களாக ஆட்சேபிக்கப்பட்டு வந்த போதிலும் இ. போ. ச அதனை தட்டிக்கழித்து வந்தது.

இச்சம்பவத்தின் எதிரொலியாக கடந்த வாரம் நலன் விரும்பிகள் ஆதரவில் நடத்திய போராட்டத்தில் பஸ் பயணிகள் பஸ் நிலையத்தில் பஸ்சைப் புறப்படவிடாது தடுத்து நிறுத்திவிட்டனர். ''வழமையான கட்டணம் அமுல் செய்'' என குரல் எழுப்னர்.

பஸ் சாரதி நடத்துநர், நேரக்காப்பாளர் ஆகியோர் பஸ்சை எடுத்துச் செல்ல முயன்ற போதிலும் முடியவில்லை. இதனை அடுத்து இ.போ ச. உயரதிகாரிகள் இங்கு வருகை தந்தனர்.

யாழ் டிப்போ, கி.பி போ. ச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வழமையான கட்டணம் விரைவில் அமுல் செய்வதாக உறுதிஅளிக்கப்பட்டது.

இதனையடுத்து பயணிகள் சுமார் இருமணித்தியாலம் கழித்து பஸ் புறப்பட அனுமதி அளித்தனர். (இ-21)

திருமலையில்

## நகர பஸ் நிலையத்திலிருந்து மீண்டும் பஸ்சேவை

திருகோணமலை ஜூலை 13

திருமலை நகரிலிருந்து தூர இடங்களுக்கான பஸ்சேவை தற்போது நகர பஸ் நிலையத்திலிருந்தே இடம் பெறுகின்றது.

அதேபோன்று தூர இடங்களிலிருந்து வரும் பஸ்களும் பஸ் நிலையத்திலேயே பிரயாணத்தை முடிக்கின்றன.

பல மாதங்களாக இச்சேவைகள் யாவும் 4-ஆம் கட்டையிலிருந்தே நடைபெற்றன.

4-ஆம் கட்டையிலிருந்து பஸ் நிலையத்துக்கு வரும் பஸ்களுக்கும் அங்கிருந்து புறப்படும் பஸ்களுக்கும் 4-ஆம் கட்டை வரை இந்திய அமைதி காக்கும்படை பாதுகாப்பு வழங்குகின்றது.

அதேபோல் தனியார் வாகனங்களும் தங்கள் சேவையை பஸ் நிலையத்திலிருந்தே ஆரம்பிக்கின்றன.

தனியார் வாகனங்களுக்கு எதுவித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. (இ- 150)

## கடலேரியில் வெளிக்கள ஆய்வு

யாழ்ப்பாணம் ஜூலை 13

யாழ். பல்கலைக்கழக புவியியல் மாணவர்கள் யாழ்ப்பாண [illegible] யில் உள்ள [illegible] கிராமங்[illegible] வெளிக்கள ஆய்வில் ஈடுபட உள்ளனர்.

கலாநிதி ரூபமூர்த்தியின் தலைமையில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வில் 30 மாணவர்கள் பங்குபற்ற உள்ளனர்.

நாவற்குழி முதல் [illegible] மீன்பிடிக் கிராமங்களி[illegible] இந்த ஆய்வு [illegible] கொள்ளப்பட உள்ளது. (இ- 9)

## ஆலயம் புனரமைப்பு

கோப்பாய் ஜூலை 13

நீர்வேலி காமாட்சியம்[illegible] புனரமைக்கப்பட்டு வருகின்றது. [illegible] வேலைகளை சிற்பி நடராஜா மேற்கொண்டு வருகின்றார். (இ-72)

## சாவகச்சேரி பகுதியில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை13

சாவகச்சேரி, மட்டுவில் பகுதிகளில் திங்கட்கிழமை இந்திய அமைதிப்படையினர்சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சோதனை நடைபெற்றது.

சாவகச்சேரி, மட்டுவில், நுணுவில் ஆகிய இடங்களிலும் இதனை உள்ளடக்கிய கிராமப் புறங்களிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வீடுகளுக்கு சென்ற படையினர் வீட்டினுள் வைத்தே சோதனை செய்தனர்.

பிற்பகல் இரண்டு மணிவரை இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ச-10)

## உணவு முத்திரை விண்ணப்பம் நிராகரிப்பு

கோப்பாய் ஜூலை 13

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் குழந்தைகளுக்கான உணவு முத்திரை பெறுவதற்கு விண்ணப்பித்த பலருக்கு அவ் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (இ-72)

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை,
கோப்பாய்,
A/L-90 கலை/வர்த்தக பிரிவு
திரு. K. தேவராஜன் திரு. M. மரியதாஸ்
திரு. A. விக்கி திரு. M. வேலா
திரு. R. மருதலிங்கம் திரு. A. H. மஃறூப்
திரு. காரை. செ. சுந்தரம்பிள்ளை
திரு. N. கிருஷ்ணனந்தன்
A/L-90
விஞ்ஞான/கணித பிரிவு
திரு. தம்பிராஜா திரு. T. தயாளன்
திரு. S. சோதிலிங்கம் திரு. T. பாலா
திரு. K. சண்முகசுந்தரம்
திரு. P. வெக்டர் வேலாயுதம்
திரு. R. மதுரமணி
O/L 88 DAY CLASS
கணிதம்: — திரு. T. வரதன்ராஜ்
விஞ்ஞானம்: — திரு. M. பாபு
ஆங்கிலம்: — திரு. K. தேவராஜன், திரு. K. பாலேந்திரா
தமிழ்: — திரு. M. திருஞானம்
சுகாதாரம்: — திரு. E. நிர்மலன்
சமூகவியல்: — திரு. A. H. மஃறூப்
சமயம்: — திரு. M. திருஞானம்
வர்த்தகம்: — திரு. E. ஜீவா
அனைத்து வகுப்புகளும் யூலை 15 இல் ஆரம்பம்
(C5756)

NIRU TUITION CENTRE
KONDAVIL
A/L 90
யூலை, 15 ல் 3. 00
பௌதிகம் - திரு. சௌந்தி
இரசாயனம் - திரு, செல்வா
தூய பிரயோகம் - திரு. கிருஷ்ணா
விலங்கியல் - திரு. ஞானம்
தாவரவியல் - திரு. பாலா
மாணவர்களின் நலன் கருதி இரசாயனவியலில் கணனிப் (Computer) பயன்பாடு ஆரம்பமாகின்றன.
(C5754)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமஜெயம்

## திருமண நன்றி நவிலல்

6 - 7 - 1988 அன்று இனிதே நிறைவேறிய எமது திருமணத்திற்கு வருகை தந்தவர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்கள், அன்பளிப்புக்கள் செய்தவர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராஜகோபாலன்
சரஸ்வதிதேவி
தம்பதிகள்
(5045)

# திருமலையிலும், யாழ்ப்பாணத்திலும்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதேச தலைமை அலுவலகங்கள்

யாழ்ப்பாணம் ஜூலை 13

வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கில் திருகோணமலையிலும் இரு பிரதேச தலைமை அலுவலகங்களை அமைக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்கப் பிரமுகர் ஒருவர் இதனை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அத்துடன் தெற்கில் மாத்தறையிலும் மேற்கில் கொழும்பிலும் பிரதேச தலைமை அலுவலகங்களும் அமைக்கப்பட உள்ளன.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பிரதேசத் தலைமை அலுவலகங்கள் அமைக்கப்பட்டால் தான் கடந்த பல வருடங்களாக இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பூரணமாக நிவாரணம் வழங்க முடியும்.

பிரதேச தலைமை அலுவலகங்கள் அமைக்கப்படுவதையும், அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதையும் மேற்பார்வைசெய்ய சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளான திரு. இல் காஒசிற்ராலோ, திரு. ஜோயின் விஜன்ட் ஆகியோர் கொழும்பில் தங்கியிருக்கின்றனர்.

கடந்த மாதம் ஜெனிவாசெஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. லெங்ஸி சிவரத்தினம் தனது தலைமையகத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதேச தலைமை அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். (இ-5)

### உதவி வழங்க அமைதிப்படை உத்தரவாதம்

வடமராட்சி ஜூலை 13

அமைதிப் படையினரின் தாக்குதலினால் உயிரிழந்த இருவரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க அமைதிப்படை அதிகாரிகள் வாக்குறுதி அளித்தனர்.

எஸ். இரத்தினவேல், எஸ். சிவலிங்கம் ஆகியோரே இறந்தவர்கள் ஆவர். (இ- 160)

## அனலைதீவு ஐயனார் ஆலயம்

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் ஆடிமாதம் 29 ஆம் திகதி (13. 08. 1988) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகுமென அறியத் தருகின்றோம்.

மு. வே. மயில்வாகனம்,
தலைவர்,
ஐயனார் ஆலய பரிபாலன சபை.
( 5241 )


## விஷ்ணு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்நகர்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

### A/L கலை, வர்த்தகம் 90

ஆரம்பம்: 16-07-1988
காலை 8.00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பொருளியல் : திரு. கிருஷ்ணானந்தன்
கணக்கியல் : திரு. வன்னியசிங்கம்
வர்த்தகவியல் : திரு. லங்கா
அளவையியல் : திரு. சுப்பிரமணியம்
தமிழ் : திரு. குழந்தை
இந்து நாகரிகம்: திரு. காரை சுந்தரம்பிள்ளை
அரசியல் : திரு. மல்றாவ்
புவியியல் : திரு. குணராஜா
(C/5757)


## பெறுமதி கூடிய முத்திரை வான் கடிதம் விற்பனையில் தபாலகத்தில் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம் ஜூலை 13

யாழ்- மத்திய தபாலகத்தில் வான்கடிதங்களும் பெறுமதி கூடிய முத்திரைகளும் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதில் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

ஒருவர் ஐந்து வான் கடிதங்களுக்கு மேல் வாங்க முடியாது.

யாழ்- தபாலகம் உயர் பீடத்திடம் கோரும் தொகையை விட குறைவான தொகை முத்திரைகள், வான்கடிதங்கள் வழங்கப்படுவதாலேயே பொதுமக்களுக்கு இவற்றை விற்பதில் யாழ். தபாலகம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

எனினும் நூறு ரூபா முத்திரைகள் அடுத்த வாரம் அளவில் விற்பனைக்கு வந்துவிடும் என்று தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-16,


## A/L 90

சனி, ஞாயிறு வகுப்பு

1. 15: பிரயோக கணிதம்
2. 30: தூய கணிதம்

ஆரம்பம்:
23. 7. 88

ஆசிரியர்:
திரு. ரவி மோகன்
யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(5048)



## மாணவர்களே!!!

காலம் பொன்னானது! கடமை கண்ணானது!!

கண்ணைத் துயின்று அவமே காலத்தைக் கழியாதீர்கள். ஒளிமயமான எதிர்காலத்தில் நீங்கள் பல துறைகளிலும் வளமான வாழ்வினைப் பெற்றுச் சிறந்திட வேண்டாமா?

அப்படியானால் எம்மால் நடத்தப்படும் பயிற்சி நெறிகளில் உங்களுக்குகந்தவற்றில் சேர்ந்து பயிலுங்கள்.

விழித்தெழுங்கள்! விரையுங்கள்!!

இடத்துக்கு முந்துங்கள்!!!

### DIPLOMA IN COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING BASIC LANGUAGE— 6 மாதங்கள்

வார நாட்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் இரு தனித் தனிப் பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
இவ்வகுப்புகளில் இன்னும் சில தினங்களுக்கு மாத்திரம் மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

### AAT (SRI LANKA) Stage II

(வார இறுதி வகுப்புகள்)

ஆரம்பம்: 16-07-1988 (சனி காலை 9.00 மணி)

கட்டணம்: ரூபா 600/-

(இரு தவணைகளில் செலுத்தலாம்)

CIMA - Stage I, AAT (Sri Lanka) - Stage I.
IAB வகுப்புகளும் நடைபெறுகின்றன.

★ தகைமை, திறமை, ஆற்றல், அனுபவம், கடமை, கண்ணியம் எல்லாம் ஒருங்கே அமைந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்களைக் கொண்ட கணக்கியல் கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்

# HARVARD INSTITUTE

SUCCESSORS OF

# CANTABIA INSTITUTE

(SISTER ORGANISATION OF OXONIA, COLOMBO)
No. 21, Main Street,
JAFFNA.

(C 5761)



எமது நேற்றைய

## புதிய வெளியீடுகள்

(1) ராமராஜன் - பல்லவி
"பார்த்தால் பசு"

(2) ராமராஜன் - நிஷாந்தி
பாண்டியன் - ஜீவிதா
"ரயிலுக்கு நேரமாச்சு"

(3) சிரஞ்சீவி - ரகுவரன் - ராதா
"டைகர் குரு"

இவ்வார ஏனைய வெளியீடுகள்:-
(1) ஊமைக்குயில்
(2) வீடு

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(C 5765)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
23—12—1928

மறைவு:
14—6—1988

### இராசதுரை - ஞானம்பிகை

பருத்தித்துறை புலோலி கிழக்கில் 14-07-88 வியாழக்கிழமை அன்று அந்தியேட்டிக் கிரியையும், சபிண்டீகரணக்கிரியையும் வீட்டில் இடம்பெறுவதால், உற்றாரும், உறவினர்களும், நண்பர்களும் அமரரின் சாந்தியில் கலந்துகொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றோம்.

உன்பிரிவால் வாடும்:
கணவன், மகன், மகள்,
[illegible]
[illegible] மக்கள்.

( 5243 )


# சாய் ஏஜன்சி

வழங்கும்

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

(ஐக்கிய அரபு இராச்சியம்)

# U. A. E.

பின்வரும் தொழில்களுக்கு ஆடைதயாரிக்கும் தொழிற்சாலையில்
உடனடி வேலைவாய்ப்புக்கள் உண்டு.

| | | சம்பளம் (US டொலரில்) | தேவையானோர் |
|---|---|---|---|
| 1. | தையல் இயந்திரம் இயக்குநர் (Sewing Machine Operators) | US$ 105 | — பெண்கள் |
| 2. | தையல் உதவியாளர் (Sewing Helpers) | 85 | — பெண்கள் |
| 3. | (Neatners) | 85 | — பெண்கள் |
| 4. | இறுதிப் பரிசோதனையாளர் (Final Checkers) | 85 | — பெண்கள் |
| 5. | ஸ்திரிகை செய்தலும் பொதியிடும் உதவியாளரும் (Ironing and Packing Helpers | 85 | — பெண்கள் |
| 6. | வெட்டுதலும் வகைப்படுத்தலும் உதவியாளர் (Cutting and Sorting Helpers) | 85 | — ஆண்கள் |
| 7. | களஞ்சிய உதவியாளர் (Store Helpers) | 85 | — ஆண்கள் |
| 8. | ஸ்திரிகையாளர் (Ironers) | 85 | — ஆண்கள் |
| 9. | பொதியிடுவோர் (Packers) | 85 | — ஆண்கள் |
| 10. | மாதிரி வெட்டுவோர் (Sample Cutters) | 109 | — பெண்கள் |
| 11. | மாதிரி தயாரிப்போர் (Sample Maker) | 109 | — பெண்கள் |
| 12. | துப்பரவாக்குவோர் (Sweepers) | 85 | — பெண்கள் |
| 13. | தையல் மேற்பார்வையாளர்கள் (Sewing Supervisors) | 125 | — பெண்கள் |
| 14 | களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper) | 132 | — ஆண்கள் |
| 15. | கத்திரிக்கும் மேற்பார்வையாளர் | 142 | — ஆண்கள் |
| 16. | கத்தரிப்போர் (Cutters) | 132 | — ஆண்கள் |
| 17. | பழுது பார்ப்பவர் (Mechanic) | 166 | — ஆண்கள் |
| 18. | தரக்கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர் (Quality Control Supervisor) | 132 | — பெண்கள் |
| 19. | முகாமையாளர் (Patron) | 109 | — பெண்கள் |
| 20. | சமையலாளர், உதவிச் சமையலாளர் (Cook - Assistant Cook | 80 | — ஆண்கள் |

- வேலை நேரம் தினசரி 10 மணித்தியாலங்கள்
- கிழமையில் ஒரு நாள் ஓய்வு
- உணவு, தங்குமிடவசதி, வைத்தியச் செலவு என்பன தொழில் கொள்வோரால் இலவசமாக வழங்கப்படும்
- இரண்டு வருட ஒப்பந்தம் தொழில் கொள்வோரின் விருப்பத்திற்கிணங்கப் புதுப்பிக்கப்படும்.
- மேலதிக நேரக் கொடுப்பனவும் வழங்கப்படும்
- இரண்டு வருடம் பூர்த்தியானதும் போனஸ் வழங்கப்படும்
- வயதெல்லை 20 — 40
- பாஸ்போட், 2 கலர் படங்கள் (போஸ்ற்காட் அளவு) 6 பாஸ்போட் அளவு படங்கள் அனுபவச் சான்றிதழ், நற்சாட்சிப் பத்திரம் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

இவற்றைவிட:

## ஓமானில்

வீட்டுப் பணிப்பெண்களுக்கும் (வயது 25 — 40)

★ Crank Shift Operators (4)
★ Boring " " (4)
★ Lathe Machine " (4)

★ Five years Experienced Engineer in Oxygen and Actygene Plant to Manage the Plant B. R. தொழில்களுக்கும் வெற்றிடமுண்டு. தொழில் நுட்பத் திறமை அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:
கொழும்பில்:-

திரு. K. சோமசுந்தரம் (சமாதான நீதவான்)
சாய் ஏஜென்ஸி
21, வில்சன் வீதி,
கொழும்பு — 12.
தொலைபேசி இல: 27253.

யாழ்ப்பாணத்தில்:-

திரு. நாகமணி குணதிசன்
விளானை
காரைநகர்.
(காரைநகர் கிழக்கு வீதியில் C. T. B. டிப்போவுக்கு அருகாமையில்)
லைசென்ஸ் இல:- 289

குறிப்பு:- பாஸ்போட் எடுத்தல், பொண்ட், புதுப்பித்தல், மாற்றம் செய்தல் ஆகியன துரிதமாகவும், குறைந்த செலவிலும் நம்பகமாகச் செய்து தரப்படும்.

(C-5760)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

**பொருள்:**

தன்னை அடுத்த பொருளைத் தன்னிடம் காட்டும் பளிங்கு போல், ஒருவனுடைய நெஞ்சத்தில் மிகுந்துள்ளதை அவனுடைய முகம் காட்டும்.


# உதயன்

உண்மை – அச்சாமை – நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
13-07-1988 த. பெ. இல. 23


## நம்ப வேண்டுமா...?

கல்முனைப் பகுதியில் தமிழ் ஆசிரியர்களுக்கு உள்ள குறைபாடுகள் சம்பந்தமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. த. மகாசிவம் பிரஸ்தாபித்திருக்கிறார்.

கல்முனையில் தமிழ் ஆசிரியர்களுக்கு இன்னமும் தமிழில் காசோலை வழங்கப்படுவதில்லை. தமிழ் ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவுகள் காசோலைகள் தமிழிலேயே வழங்கப்பட வேண்டும் எனக் கல்வித்திணைக்களம் உத்தரவிட்டிருக்கிறது. எனினும் கல்முனையில் உள்ள கல்வி அலுவலகம் அந்த உத்தரவைச் சரிவரக் கடைப்பிடிக்கவில்லை. இவ்வாறு ஆசிரியர் சங்கச் செயலாளர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

கல்முனைக் கல்வி அலுவலகத்தின் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன் போக்கு, வெறும் அசமந்தமா அல்லது நந்தியாக நிலை இருக்கும் விருப்பமா அல்லது வேண்டுமென்று தமிழ் உபயோகத்தை தவிர்க்கும் மொழித் துவேஷமா என்பது தெரியவில்லை.

கல்வித் திணைக்கள உத்தரவை மீறி நடந்து கொள்வதற்கு உட்காரணம் என்ன? மொழித்துவேஷம், இனவெறி பிடித்த அதிகாரிகள் எவரும் அங்கு இருக்கிறார்களா? அவர்களின் அதிகாரத் தனத்தின் பிரதிபலிப்பாகத் தமிழ் புறக்கணிக்கப்படுகிறதா?

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில், கல்முனைக் கல்வி அலுவலகத்தின் உள்விவகாரங்கள் எதையும் திரு. மகாசிவம் வெளியிடவில்லை.

எப்படியானாலும், தமிழ்ப் பிரதேசத்திலேயே தமிழ் புறக்கணிக்கப்படும் செய்தி பல முக்கிய விடயங்களைப் புலப்படுத்தி நிற்கிறது.

1956 ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்த தனிச் சிங்களச் சட்டம் தென்னிலங்கையில் நூற்றுக்கு நூறு வீதம் நடைமுறையாகி வருகிறது. எவ்வித தங்கு தடையும், தயக்கமும், தாமதமும் இல்லாமல் சிங்களம் மட்டும் சட்டம் வார்த்தைக்கு வார்த்தை, எழுத்துக்கு எழுத்து, கேள்விக்கு இடமில்லாமல் செயல் வடிவம் பெற்று வருகிறது.

ஆனால்—

சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து தமிழர்களுக்கு சலுகை வழங்கவெனக் கொண்டுவரப்பட்ட நியாயமான தமிழ் மொழி உபயோகச் சட்டம், தமிழ்மொழி விசேஷ சரத்துகள் சட்டம் என்பன அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு முறையே 30, 22 வருடங்களாகியும் அவை சரிவர, முழுமையாக நடைமுறையாகவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் தமிழை நிர்வாக மொழியாகப் பயன்படுத்தச் சட்ட வசதி செய்யப்பட்ட கால் நூற்றாண்டின் பின்னரும்—

தமிழை நிர்வாக மொழியாகப் பயன்படுத்துவதைக் கண்காணிக்கவென, வசதி செய்வதற்கெனத் தனியான அமைச்சு ஒன்று, தமிழர் ஒருவர் தலைமையில் இயங்கியும்—

தமிழ்ப் பிரதேசத்திலேயே நிர்வாக அலுவல்களில் தமிழ் புறக்கணிக்கப்படுகிறது என்றால், அது எதைக் காட்டுகிறது?

தமிழர்களின் உரிமைகளை வழங்க சிங்கள அரசுகள் விரும்பவில்லை. சூழ்நிலை காரணமாக, பெயருக்காகச் சலுகைகளை வழங்குவதாகக் கூறினாலும், சட்டம் கொண்டு வந்தாலும் அதன் பெறுபேறுகளைத் தமிழர் அனுபவிக்காமல் பார்த்துக் கொள்கின்றன ஸ்ரீலங்கா அரசுகள்.

இப்படி ஒரு நிலையில்—

வடக்கு – கிழக்கு இணைப்பைப் பிரகடனப்படுத்தாமல்—

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தாமல்—

சிங்களத்துக்கும் தமிழுக்கும் இன்னும் சம அந்தஸ்து வழங்காமல்—

தமிழர்கள் தங்களுக்கு உரிமைகளும், சலுகைகளும் கிடைக்கும் என்று நம்புவது எப்படி?

நம்பினோர் கெடுவதில்லை என்பார்கள். ஆனால் நம்பி நம்பிக் கெட்டவர்கள் தமிழர்கள்.

தங்கள் அலுவல்களை, நிர்வாகத்தை, ஆட்சியைத் தாமே நடத்தும் நிலை உருவானால் மட்டுமே அவர்கள் எதையும் நம்ப முடியும். உரிமைகளையும், சலுகைகளையும் சரிவரவும் அனுபவிக்க முடியும்.

72 மணித்தியாலத்தில்

# அமெரிக்கத் தூதரை வெளியேறும்படி நிக்கரகுவா அரசு உத்தரவு!

மனாகுவா, ஜூலை 12

அமெரிக்கத் தூதரையும் அவருடன் ஏழு அமெரிக்க ராஜதந்திரிகளையும் நாட்டைவிட்டு வெளியேறும்படி நிக்கரகுவா அரசு நேற்று உத்தரவிட்டது.

அமெரிக்கத் தூதரை வெளிநாட்டமைச்சுக்கு அழைத்து, நாட்டைவிட்டு வெளியேறும் உத்தரவை அவர் கையில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

72 மணித்தியாலங்களுள் வெளியேற வேண்டும் என்று அமெரிக்கத் தூதருக்குக் கூறப்பட்டது.

உள்விவகாரங்களில் தலையிட்டது, கிளர்ச்சிக்காரர்களுக்கு ஊக்கமளித்தது ஆகியவற்றுக்காவே வெளியேற்றப்படுகிறார்கள் என்று நிக்கரகுவா அரசு அறிவித்தது. (எ)

**வெளி உலகில்**

## மணிலாவில் மோதல்; 10கெரில்லாக்கள் பலி!

மணிலா ஜூலை 12

பிலிப்பின்ஸின் கஸோன் மாகாணத்தில் அரசுத் துருப்புக்களும் கிளர்ச்சித் துருப்புக்களும் மோதிக் கொண்டன.

கிளர்ச்சிக்காரர்களினால் கடத்தப்பட்ட 6 இராணுவ அதிகாரிகளை மீட்கும் பணியில் அரசுத் துருப்புக்கள் ஈடுபட்ட போதே இந்த மோதல் ஏற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இம்மோதலில் 10 கிளர்ச்சிக்காரர்கள்வரை உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

ரஷ்யர்களுக்கான

## பிரிட்டிஷ் பிரதமரின் பி. பி. சி. பேட்டி; மனநோயாளரும் கேள்வி கேட்டார்

மாஸ்கோ, ஜூலை 12

பிபிசியின் ரஷ்ய மொழி ஒலிபரப்பில் பிரிட்டிஷ் பிரதமர் மார்க்ரட் தாட்சர் நேற்றுப் பேட்டி அளித்தார்.

சோவியத் யூனியனில் இருந்து பலர் கேட்ட கேள்விகளுக்கு திருமதி தாட்சர் பதிலளித்தார்.

எலிஸபெத் மகாராணி முதல் ரஷ்ய – பிரிட்டன் அரசியல் உறவு வரை பிரதமரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

ரஷ்யாவில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் பற்றிக் கருத்து வெளியிடுகையில் ''மாற்றங்களைக் கொண்டு வர கோர்பச்சேவ் துணிச்சலாக, வீரமாகச் செயல்படுகிறார்'' – என்று தெரிவித்தார்.

கோர்பச்சேவின் சீர்திருத்தக் கொள்கை, சோவியத்தின் ஜனநாயக பாதையில் ஒரு மைல் கல் என்றும் திருமதி தாட்சர் வர்ணித்தார்'

சோவியத்தில் மனநோயாளர் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கும் ஒருவரும் பிரதமரிடம் கேள்வி கேட்டார். பாடசாலை மாணவியும் கேட்டார்.

பாடசாலை மாணவியை பிரிட்டனுக்கு விஜயம் செய்யும்படி அப்போது பிரதமர் அழைப்பு விடுத்தார்

பிபிசி ஒழுங்கு செய்த இந்த உரையாடலை, ரஷ்ய அதிகாரிகள் குழப்பியடிக்கும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

''கருத்தைக் கவர்ந்த' வழமைக்கு மாறான நிகழ்ச்சி இது'' — என்று சோவியத் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் வருணித்தார். (எ)

### கோர்பச் சேவின் போலந்து விஜயம்!

மாஸ்கோ ஜூலை 12

சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவ் போலந்து நாட்டுக்கு உத்தியோக பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

போலந்து கம்னியூஸ்ட் கட்சியின் கொள்கைத் திருத்தங்கள் பற்றி தனதுவிஜயத்தின்போது ஆராய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

மத்திய தரைக்கடலில்

## முகமூடி மனிதர் கப்பலைத் தாக்கினர்; 9 பயணிகள் பலி; 80 பேர் காயம்

ஏதென்ஸ் ஜூலை 12

மத்திய தரைக்கடலில் ஏஜியன் தீவுக்கு அருகில் விரைவு படகு ஒன்றில் வந்த முகமூடி மனிதர்கள் நடத்திய தாக்குதலில் உல்லாசப் பயணக்கப்பல் ஒன்றில் பயணஞ் செய்து கொண்டிருந்த பயணிகளில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

எண்பதுக்குமேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.–

விரைவு படகுஒன்றில் வந்த 3 முகமூடி மனிதர்கள் உல்லாசக்கப்பலை நோக்கிச்சுட்டனர். பின்னர் கிரேனட்டுக்களைக் கப்பலுக்குள் வீசினர்.

அச்சமயம் கப்பலில் ஐந்நூற்றுக்கும் அதிகமான பயணிகள் இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் பிரெஞ்சு, ஜேர்மன், அமெரிக்கா, பிரிட்டன், சுவீடன், நாட்டுப் பிரசைகள் ஆவர்.

தாக்குதலுக்கு அஞ்சி கடலுக்குள் குதித்தபயணிகளே உயிரிழந்தனர் என்றும் கூறப்பட்டது.

இத்தாக்குதலுக்கு முன்னர் ஏதென்ஸ், நகரில் கார்க்குண்டு ஒன்று வெடித்து இரண்டு பேர் உயிரிழந்தனர். கார்லெபனன் பாஸ்போட் வைத்து இருந்த ஒருவருக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## நட்டஈடு வழங்க அமெரிக்கா முடிவு!

வாஷிங்டன், ஜூலை 12

வளைகுடாவில் ஈரான் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த 290 பயணிகளுக்கும் நட்டஈடு வழங்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

வெள்ளை மாளிகைப் பேச்சாளர் அரசின் தீர்மானத்தை நேற்று அறிவித்தார்.

நட்டஈடாக எவ்வளவு பணம் வழங்கப்படும் என்பதை அவர் வெளியிடவில்லை. தொகை பின்னர் நிர்ணயிக்கப்படும் என்று அறிவித்தார்.

நட்ட ஈட்டுப் பணம் ஈரான் அரசிடம் கொடுக்கப்படமாட்டாது: உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நேராக வழங்கப்படும்என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

### கூட்டம் ஒத்திவைப்பு

வளைகுடாவில் ஈரான் விமானத்தைஅமெரிக்கா சுட்டு வீழ்த்திய சம்பவம் பற்றி விசாரிப்பதற்காக இன்று நடைபெறவிருந்த ஐ.நா பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டம் வியாழக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

உறுப்பு நாடுகளுக்கு இவ் விஷயம் குறித்து மேலும் ஆலோசனை நடத்த அவகாசம் அளிக்கும் பொருட்டே கூட்டம் ஒத்திவைக்கப்படதாக அறிவிக்கப்பட்டது. (எ)

### கோர்பச்சேவ் பேச்சு

சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவ் நேற்று போலந்து நாடாளுமன்றத்தில் பேசினார்.

மரபுவழி அயுதங்களைக் குறைக்கும் திட்டம் ஒன்று பற்றி தனது பேச்சில் திரு. கோர்பச்சேவ் வெளியிட்டார்.

### ராஜீவின் வெளிநாட்டுப் பயணம்

பிரதமர் ராஜீவ் காந்தி இன்று காலை நான்கு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு புறப்பட்டார்.

முதலில் ஜோர்தான் சென்றடைந்தார். யூகோஸ்லாவியா, துருக்கி ஆகிய நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# துப்பாக்கிச் சத்தம் கேட்க படையினர் பஸ்ஸுக்குள் குப்புறப் படுத்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைத் தாண்டி பஸ் மந்துவில் காட்டுப் பகுதியூடாகச் சென்றுகொண்டிருந்தபோது காட்டுக்குள் இருந்து திடீரென்று சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. பஸ்ஸுக்குள் நின்றுகொண்டு பயணம்செய்த படையினர் குப்புற விழுந்து படுத்தனர்.

பிரஸ்தாப பஸ்ஸில் பயணம்செய்து மயிரிழையில் உயிர்தப்பிய ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த இ. போ. ச. பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் இடம்பெற்றது.

சம்பவத்தின்போது பஸ் பயணிகளில் மூவர் கொல்லப்பட்டதும் படையினரில் சிலர் காயமடைந்ததும் தெரிந்தவையே.

சம்பவநேரம் பஸ்ஸில் இருந்தவர் தகவல் தருகையில் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி எமது பஸ் சென்று கொண்டிருந்தது.

ஆனையிறவு, முரசுமோட்டை, தர்மபுரம் ஆகிய சென்றிகளில் இராணுவத்தினரின் நுணுக்கமான சோதனைகளுக்கு நாம் உள்ளானோம்.

### பயங்கர உலகு

விஸ்வமடுப் பிரதேசத்தை அண்மித்தபோது ஏதோ பயங்கர உலகுக்குள் பிரவேசிப்பது போன்று இருந்தது.

வழமையாக விஸ்வமடு வருவதென்றால் எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. அங்கே விற்கப்படுகின்ற பால் ஒரு 'கப்' பருகினால் களை தீர்ந்துவிடும்.

பலவகையான பழவகைகள், காய்கறிகள் என்பன விற்கப்படுகின்ற செழிப்பான அந்தக் கிராமம் அன்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

மனித நடமாட்டமே இருக்கவில்லை. ஏன் இவ்வூர் இப்படி இருக்கின்றது என்று அருகில் இருந்த ஒருவரிடம் விசாரித்தேன்.

அண்மையில் நடந்த துப்பாக்கிச் சமரில் இந்திய இராணுவத்தினர் சிலர் இறந்ததுடன் அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்பட்டதால் மக்கள் இவ்வூரைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்று சுருக்கமாக அவர் பதிலளித்தார்.

### பெரும் அழிவு

பஸ் விஸ்வமடுவைத் தாண்டிச்சென்று கொண்டிருந்தபோதுதான் அவரின் வார்த்தை எவ்வளவு உண்மை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

விஸ்வமடுக் கிராமத்தின் தனிப்பெருஞ்சொத்தாக விளங்கிய வாழை மரங்கள் எல்லாம் வெட்டிச் சரிக்கப்பட்டிருந்தன.

குடிசைவீடுகள், கொட்டில்கள், கடைகள் என்பன முற்றாக [illegible] தன.

அடிக்கடி இராணுவத்தினர் வீதிவழியே போய்க் கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்புச்சம்பவத்தில் உயிர் தப்பியவர் தகவல்

பஸ் ஒருவாறு தேவிபுரம் என்ற கிராமத்திற்குச் சென்றதும் அங்கேயும் எமது பொதிகள் படையினரால் சோதிக்கப்பட்டன. சோதனை முடிந்து பஸ் புறப்பட்டு 15 நிமிடம் கழித்து புதுக்குடியிருப்பில் மீண்டும்ஒரு சோதனைச் சாவடி கழிந்து ஒருவாறு இரட்டைவாய்க்கால் சோதனைச் சாவடியையும் தாண்டிவிட்டால் அடுத்தது முல்லைத்தீவுதான்.

### இராணுவத்தினர்

இந்நிலையில் 20 இராணுவத்தினர் அளவில் பஸ்ஸில் ஏறி எம்முடன் வந்துகொண்டிருந்தனர். இராணுவத்தினர் அனைவரும் நின்றபடியே பயணம் செய்துகொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தை, தாண்டி பஸ் மந்துவில் காட்டுப்பகுதி ஊடாகச் சென்றுகொண்டிருந்தது.

அப்போது காட்டுப் பக்கத்தில் இருந்து திடீரென துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன.

எனக்கு அருகில் இருந்த பெண் குளறிக்கொண்டு கீழே விழுந்தார். இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது பஸ்ஸுக்குள் ஒரே கூச்சல். துப்பாக்கிச் சூடு கேட்கவே இராணுவத்தினர் குப்புறப்படுத்துக் கொண்டனர். உடனே [illegible]

[illegible] துப்பாக்கிச் சத்தங்கள் பஸ்சை நோக்கிக் கேட்டுக்கொண்டே இருந்தன.

ஆனால் பஸ் சாரதியோ பஸ்சை மிக வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தார்.

இரட்டை வாய்க்கால் கிராமத்தில் பஸ் நிறுத்தப்பட்டபோது இராணுவத்தினர் இறங்கிக் கொண்டனர்.

அவர்களில் ஒரு சிலருக்குக் காயம் இருந்தது எனினும் உயிர் ஆபத்து காயம் எதுவும் இல்லை.

இரட்டை வாய்க்காலில் இறங்கியபோது 12 வயதுக் குழந்தை ஒன்றை நான் பார்த்தபோது அவரது குடல் வெளியே வந்திருந்தது.

இதன்பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் அப்பன்னிரண்டு வயதுச் சிறுவனும் மற்றும் இருவரும் இறந்துவிட்டனர் என்று பின்பு அறிந்தேன்.

இப்படி அவர் கூறினார். (இ)

### வடமாகாண ஆசிரியர் சங்க கருத்தரங்கு

வடமாகாண ஆசிரியர் சங்க ''கல்விக் கருத்தரங்கு'' 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆசிரியர் சங்கப் பணிமனையில் நடைபெறும். இக்கருத்தரங்கில், ஆசிரியர்களும் புதிய சம்பளத் திட்டமும், தொடர்மதிப்பீடும் அதன் விளைவும், தேசியக் கல்வியும் இன்றைய நிலையும் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

## சமய சந்நிதிகளில்

### நீர்வேலி செல்லக் கதிர்காம உற்சவம்

நீர்வேலி, ஜூலை 13

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை 14 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 17 திருவிழாக்கள் நடைபெறும். இந்த உற்சவத்தில் 29 ஆம் திகதி தீர்த்த உற்சவமும், 30 ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். (சி

### குறுமுனி அம்பாள் கும்பாபிஷேகம்

சாவகச்சேரி ஜூலை 13

தென்மட்டுவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அருள் மிகு ஸ்ரீ குறுமுனி அம்பாள் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் நாளை 14 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

கும்பாபிசேகக் கிரியைகள் ''கிரியாகலாபமணி'' ஸ்ரீ சக்திதாசன் சிவஸ்ரீ ச. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (இ-31

### ஓடாத பஸ்ஸுக்கு புதிய இயந்திரம்

நெடுந்தீவு ஜூலை 13

நெடுந்தீவில் உள்ள வடபிரதேச போக்குவரத்துச் சபையின் பஸ்ஸுக்கு புதிய இயந்திரம் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென புதிய இயந்திரம் ஒன்று இங்கு வந்து சேர்ந்துள்ளது. (இ-111)

### மகாதேவா ஆச்சிரமத்தில் சமயதீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 13

கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தில் ஐம்பதுக்கும் அதிகமான பாடசாலைச் சிறுவர்களுக்கும் மற்றும் அடியார்களுக்கும் திருநெறிக்கழகம் சமய தீட்சை அளித்தது.

மேற்படி ஆச்சிரமத்தைச் சேர்ந்த அருட்திரு வடிவேற்சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சிவஸ்ரீ சோ. சிவசுப்பிரமணியக் குருக்கள் சகலருக்கும் தீட்சை அளித்தார்.

அருட்திரு வடிவேற்சுவாமிகள், திருநெறிக்கழகத் தலைவர் ப. கணேசபிள்ளை ஆகியோர் சிவதீட்சையின் மகிமை பற்றிப்பேசினர்.

கழகச் செயலாளர் திருமதி செல்வராணி சோமசேகரம், சங்கீத பூஷணம் பகவதி தர்மசிங்கம், திரு. நடராசா ஆகியோரின் சங்கீதக்கச்சேரி பஜனை ஆகியனவும் இடம்பெற்றன [இ-76]

### யாழ் மாவட்ட சிறு தோழர் குழு

யாழ்ப்பாணம், ஜூலை13

யாழ். மாவட்ட ஆணையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட ''குழு விடுமுறை''யை 5பாடசாலைகளைச் சேர்ந்த 51 சிறுதோழர்களும் 8 சிறுதோழத் தலைவியரும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் சமீபத்தில் கழித்தனர்.

சிறுவருக்குவழக்கம் அளிக்கும்விதத்தில்சமைத்தல் பாத்திரம் கழுவுதல், பாடப் பயிற்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவை தொடர்ந்து மூன்று தினங்கள் இடம் பெற்றன. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

13 - 07 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்களை
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பதவிக்காலத்தை நீடிக்கும் உரிமை மக்களுக்கே உண்டு

### தேர்தல் கூட்டத்தில் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை 13 நாடாளுமன்றத்தின் ஆயுளையோ, ஜனாதிபதியின் பதவிக்காலத்தையோ தேர்தல் அல்லது சர்வசன வாக்கெடுப்பு மூலம் நீடிக்கும் உரிமை மக்களுக்கே உண்டு.

ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்கண்டவாறு இடைத்தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது.-

சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப்பது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்குச் சமமானதாகும்.

பயமுறுத்தல், வன்செயல்களினால் யு.என்.பியை ஜே.வி.பி.யினர் பயமுறுத்திவிட முடியாது. ஜனநாயகப் பாதைக்கு, வன்செயலைக் கைவிட்டுத் திரும்பும் வரை ரோஹண விஜேவீராவைக் கொலைகாரராகத்தான் அரசு கணிக்கும். கொலைக் குற்றவாளியாகக் காணப்படுவோர் தூக்கிலிடப்படுவர். வன்செயலைக் கைவிட்டால் ரோஹண விஜேவீராவுக்கு அரசு மன்னிப்பு வழங்கும்.

சிறிமா, அனுரா, நந்தா எல்லவல ஆகியோரின் படங்களுடனான போஸ்டர் ஒன்றைப் பார்த்தேன். அப்போஸ்டரில் ரோஹண விஜேவீராவின் படத்தையும் சேர்த்து அச்சிட்டிருக்க வேண்டும். இரத்தினபுரியில் நடைபெறும் இடைத்தேர்தல் ஒரு 'யுத்தம்' போல் நடக்கிறது. நான்கு இடைத்தேர்தல்களிலும் யு.என்.பியே வெற்றியீட்டும்.

இப்படித் திரு. ஜெயவர்த்தன தெரிவித்தார்.

(அ-எ)

### 50 பேர்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

மற்றும் ஆயுதங்களை வைத்து இருந்தனர் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

மிரட்டல், பயமுறுத்தல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டனர் என்று பொலீஸார் குற்றஞ்சாட்டினர். இது குறித்து சுதந்திரக் கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பிவைத்தார்.

(அ-எ)

### கொலையின்பின் கொள்ளை!

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வத்தேகம கடைவீதியைச் சுற்றிவளைத்த ஆயுதம் தரித்த கோஷ்டி இரண்டு பேரைச் சுட்டுக்கொன்றுவிட்டு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றது என்று அறிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலின்போது இயேட்டர் ஒன்றும் தீக்கிரையானது என்று கூறப்படுகிறது.

### ஒப்பந்தம் ஏற்பட்டால்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போம்.

**விருப்பம்**

இந்த நாட்டின் அரசியலில் ஈடுபடுவதற்கு எந்த ஒரு தனிமனிதனுக்கும் உரிமை உண்டு அதனை யாரும் மறுக்க முடியாது. அதேபோல் குழுவாகவோ, ஐக்கியப்பட்டோ செயற்படுவதற்கும் உரிமை உண்டு. இந்த வகையில் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் நாம், இணைந்த ஓர் ஐக்கியமான நிலையிலேயே செயற்படவிரும்புகின்றோம்.

**மோதலை நிறுத்த வேண்டும்**

இயக்கங்கள் உயிர்க் கொலைகளைத் தவிர்த்து ஐக்கியமாகச் செயற்பட முன்வர வேண்டும். இயக்கங்கள் தமக்குள் மோதிக் கொள்வதால் எவருக்கும் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை.

இயக்கங்களின் ஐக்கியத்திற்காக நாம்விடுத்த அழைப்பிற்கு ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப். ஆகிய இரு இயக்கங்களும் எழுத்து மூலம் இணக்கம் தெரிவித்துள்ளன.

அண்மையில் மன்னார்ப் பகுதியில் தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவளிக்கக் கூடாது, அவற்றுடன் எதுவித தொடர்பும் வைத்திருக்கக் கூடாது என்று சுவரொட்டிகள் காணப்பட்டன. அரசியலில் ஈடுபட எவருக்கும் உரிமை உண்டு. இந்த அடிப்படையில் இயக்கங்கள் இப்போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆகவே, இந்தச் சுவரொட்டி அறிக்கையைச் சம்பந்தப்பட்டவர்கள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

— இப்படி அவர் தெரிவித்தார். (அ-164)

### வெட்டிக் கொலை!

மாதகலில் நேற்று நடைபெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில் சிவசோதி தவேந்திரம் (வயது 25) என்ற இளைஞர் வெட்டிக் கொல்லப்பட்டார். (க-10)

### நீண்டகால. . .

(1ம்பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தது.

ஆனால் கடந்தவருடம் ஜூலை5ஆம்திகதி நெல்லியடியில் கரும்புலி மில்லரால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கை அரசு நிலைகுலைந்தது.

புலிகள் அழிந்துவிடவில்லை, தமிழீழப் போராட்டம் ஓய்ந்துவிடவில்லை என்பதை இலங்கை அரசும் உலகமும் புரிந்துகொண்டன.

இதன்பின் தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்காக வந்து, இலங்கை அரசு செய்ததிலும் பார்க்கப் பலமடங்கு மேலாகச் செய்து தமிழீழப் போராட்டத்தை நசுக்கிவிட்டதாக இந்தியா தெரிவிக்கின்றது. விரைவில் தேர்தல் நடத்தலாம் எனவும் கூறிவருகின்றது.

இராணுவ மயமாக உள்ள தமிழ்மண்ணில் தேர்தல்களை நடத்தித் தனது அடிவருடிகளை ஆட்சியில் அமர்த்தி இங்கு ஜனநாயகம் மலர்ந்துவிட்டதென உலகை ஏமாற்றலாம் என இந்தியா எண்ணுகின்றது.

தமிழர்களுக்கு நிரந்தர அமைதி தராத எந்த ஒரு தீர்வையும் விடுதலைப் புலிகள் ஏற்க மாட்டார்கள்.

சமாதானம் என்ற போர்வையில் புலிகளையும் அதன் தலைவர்களையும் இந்தியா அழிக்க முயன்று வருகின்றது. ஒப்பந்தம்என்ற அடிமை சாசனத்தைத் தமிழ் மக்கள் மீது சமூகவிரோதிகளின் துணையுடன் திணித்துவிடலாம் என இந்தியா முயல்கிறது.

சமாதானம் என்ற பெயரில் புலிகளையும் அதன் தலைவர்களையும் தமிழ் மக்களையும் அழிக்கும் பணி தொடருமானால், சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதை நிறுத்தி நிரந்தரமாக ஆக்கிரமிப்பிற்குஎதிராக ஒரு நீண்டகால யுத்தத்திற்குத் தமிழீழ மக்கள் தயாராவதைத் தவிர வேறு வழியில்லை.

கடந்த மாதம் இந்தியப் படையுடன் ஏற்பட்ட போரில் 80 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

கிளிநொச்சியில் 26 பேரும், மன்னாரில் 7 பேரும், மட்டக்களப்பில் 7 பேரும், வவுனியாவில் 7 பேரும், யாழ். மாவட்டத்தில் 2 பேரும், முல்லைத்தீவில் 15பேரும் திருகோணமலையில் 16 பேரும் இறந்துள்ளனர்.

புலிகள் தரப்பில் மேஜர் கலா, கப்டன் ராகவன், கப்டன் சபேசன், மனோ, அலெக்ஸ், ராமு, ஹரி, சதா. பிறின், அரசன், தியாகு ஆகிய 11 பேர் மரணமடைந்தனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-164)

### மக்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உணர்வுகளையும் நசுக்குவதற்குப் பயன் படுத்துகின்றார். இதனை இந்திய அரசுஉணரவேண்டும்.—

இந்திய அமைதிப் படையினரைப் பயன்படுத்தி, ஜனாதிபதி ஜே.ஆர். தமிழ் மக்களை பலவீனப் படுத்தி வருகின்றார். தமது எதிர் பார்ப்புநிறைவேறியதன்பின் அமைதிப் படையினரை திரும்பிச் செல்லும் படி பணித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.—

என்ற கருத்துக்களும் கலந்துரையாடலின் போது பிரமுகர்களால் முன் வைக்கப்பட்டதாக அறியவந்தது.

தமிழ்ப் பகுதிகளில் செய்யப்பட வேண்டிய புனர் நிர்மாண, மறுவாழ்வு நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடலின் போது ஆராய இந்திய அதிகாரிகள்முற்பட்டனராயினும், யுத்த நிறுத்தம்சமாதானம்வருவதற்கு முன்னர் அவை பற்றிப் பேசிப்பயனில்லை என்று பிரமுகர்களில் சிலர் சுட்டிக் காட்டி, அதனைத் தவிர்த்துக் கொண்டதாகவும் கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரமுகர்கள் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-5)

### கொக்குவில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை13

கொக்குவில் பகுதியை நேற்று சுற்றி வளைத்த அமைதிப் படையினர் அங்கு தீவிர தேடுதலை நடத்தினர்.

(க-9)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

1. குவைத் — Cleaners
2. சவூதி அரேபியா

1. CLEANERS
2. PLUMBERS
3. A/C TECHNICIAN
4. A/C DUCT FABRICATOR
5. B. Com. 5 Years Experience in preparing Project Report.

PHOTO — 3
PASSPORT —

தகவல்:
Mr. K. A. YOGENDRAN
(YOGA)

உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:
ARIYAM
52, Old Park Road,
Chundukkuli - Jaffna.
(5245)

## 4ஆம் ஆண்டு வீரஅஞ்சலி



மாசற்ற வீரன்

**இரஞ்சன் லாலா**

வீர ஜெனனம்: 02 - 09 - 1960

வீர மரணம்: 13 - 07 - 84

இயக்கப் படைக்கலம் எதிரிகள் கையில்
அகப்பட் டிடாமல் அவற்றைக் காக்க
முன்னே சென்று நின்னுயிர் கொடுத்தாய்
என்னே துணிவு! என்னே வீரம்!!
அன்றுநீ தியாக மாற்றிக் காத்த
நன்பே ரியக்க நானில மெங்கும்
புகழுடன் திகழ்கிறது; புலியே காண்பாய்!
அகமகிழ்ந் துன்னை யன்பினால் வாழ்த்துவோம்!
ஈழத்தமிழ் நாட்டின் சரித்திரம் உன்பெயர்
அமிழ்தாய்ப் போற்றும் ஐயநீ வாழ்கவே!

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னோடியாக அதனை வளர்ப்பதில் அரும்பாடுபட்டு 13-07-84 அன்று தொண்டமனாற்றில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நேரடி மோதலில் வீர மரணமடைந்த கப்டன் இரஞ்சன்லாலாவுக்குஎமது வீரஅஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

— நண்பர்கள்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லில்லி ரேஸ் ஜோசப்

திருமதி லில்லி ரேஸ் ஜோசப் காலமாகிவிட்டார். அன்னார் சில்வெஸ்ரர் ஜோசப்பின் அன்பு மனைவியும் சணு, சியாமா, டிலானி, அன்ரன், சூட்டி ஆகியோரின் அருமைத் தாயாருமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (13 - 7 - 88) மாலை 3 மணிக்கு 10 A, பழைய பூங்கா வீதி இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சில்வெஸ்டர் ஜோசப்
10, A, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம். [5247]

### Dr. பொன்னையா இராசரத்தினம்

அளவெட்டி ஓய்வு பெற்ற R. M. P. பொன்னையா இராசரத்தினம் 11-07-1988 திங்கள் காலமாகிவிட்டார். அன்னார் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும், சிவதாசன், சிவமலர், சிவரஞ்சனி, புவிராஜ் (சவூதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தகுமாரி, செந்தில்நாதன் (இலங்கை வங்கி-யாழ்ப்பாணம்), இராமதாஸ் (ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கனகம்மா (மலேசியா) காலஞ்சென்ற செல்லப்பா (பர்மா), காலஞ்சென்ற நடராசா (மலேசியா), நல்லையா (ஓய்வுபெற்ற அதிபர் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி-கனடா), முத்துத்தம்பி (மலேசியா), காலஞ்சென்ற செங்கமலம் (கும்பழாவளை) ஆகியோரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் (மடுல்சிமா) அன்பு மருமகனும், கோகுலன், அபிராமி, மயூரன், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பாட்டனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-07-1988 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அளவெட்டியில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சி. செந்தில்நாதன்
''இராசகிரி''
அளவெட்டி. (5046)

### கஸ்பார் அன்ரன்

குருநகரைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபர் கஸ்பார் அன்ரன் கடந்த வியாழக்கிழமை (07- 07- 88) தென்னகத்தில் காலமானார்.

இவர் கஸ்பார் அந்தோனியா தம்பதிகளின் அன்பு மகனும் பிலோமினா (மணி)வின் அருமைக் கணவரும் ரகு (பிரான்ஸ்) றஜி, றஜினி, ஜான்சி, விஜினி, ரதி, கொடி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிறிஸ்தியான் அருளம்மா - மனவல் ஷெலக்ரீனா தம்பதிகளது மருமகனும் காலஞ்சென்ற பிரான்சிஸ். சின்னராசா, சேவியர், டேவிட் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் செல்வராணி (பிரான்ஸ்) கிறிஸ்துராசா, துரைசிங்கம், பாக்கியம், சரோஜா, கிட்லர், பஞ்சவர்ணம், அழகு, ராசாத்தி, கிளி, ரேங்காஸ், லில்லி ஆகியோரின் மைத்துனரும் துரைராசசிங்கம், செல்வராசா, தங்கராசா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் சாந்தினி, வினி, நிலானி, ராஜன், டயானி, றீகன் ஆகியோரின் பெரிய தந்தையும் கலா, சித்திரா, மகாராணி ஆகியோரின் மாமனாரும் மரீனா, மயூரா, தர்ஷனா, மல்கியா, மகிபன், சுபாஷினி, சுலெக்ஷன், ரதி ஆகியோரது பேரனும் ஆவார்.

நல்லடக்கம் அன்னாரது 23/4, பாக்ரோட், றெக்கிளமேஷன் இல்லத்தில் இருந்து இன்று (13 - 07 - 88) புதன்கிழமை மாலை 3 - 30 மணிக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு யாழ் - பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி: பிலோமினா (மணி)
(C 5770)

## தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி!

COLOMBO GAS & WATER CO., LTD.
ஸ்தாபனத்தாரால்
சாவகச்சேரியில் அங்கீகாரம் பெற்ற எம்மிடம்
உங்கள் வீட்டுக்குத் தேவையான
L.P. GAS
மற்றும் துணை உறுப்புக்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
த. தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி. (5242)

## தேவை

பிரபல எஞ்ஜினியரிங் நிறுவனம் ஒன்றுக்கு மேசன்மாரும், தச்சு வேலை ஆட்களும் தேவை. உடனே விண்ணப்பிக்கவும்.

விளம்பர எண்-278,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(C 5775)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 13 - 07 - 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது, Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 92/2 Navalar Road, Jaffna on Wednesday 13 th July 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org